உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு

துணர் ௰௪ { வெகுதானிய, மார்கழி } மலர் ௬


| | | |
|---|---|---|
| க. | நாஞ்சில் வேள் மறுப்பு<br>திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் M. A. | 325 |
| உ. | யசோதர காவியம்—புத்துரை<br>திரு. வே. மு. ஸ்ரீநிவாஸ முதலியார் அவர்கள் | 331 |
| ௩. | இலக்கணம் கண்டதற்கிலக்கியம் இயம்பல்<br>கோவை. திரு. கு. நடேச கவுண்டர் அவர்கள் | 336 |
| ௪. | பனையரும் இந்திரனும்<br>வித்துவான். திரு. S. குருஸ் அந்தோணி அவர்கள் | 340 |
| ரு. | அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப்பேரவை<br>பண்டிதர். திரு. மு. அருணாசலம் பிள்ளை அவர்கள் | 345 |
| ௬. | வள்ளல் மலையமான் திருமுடிக் காரி<br>திரு. சிவ. குப்புசாமிப் பிள்ளையவர்கள் | 349 |
| எ. | வடமொழியும் ஆசிய-ஆஸ்ட்ரேலிய மொழிகளும்<br>வித்துவான். திரு. மா. இராசமாணிக்கம் அவர்கள் P.O.L. | 355 |
| அ. | நன்கொடை<br>பொழிற்றொண்டர் | 360 |



செந்தமிழ்ப்புரவலர், தமிழவேள்,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பொழிற்றொண்டர்.

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்.

உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| | | |
|---|---|---|
| துணர் மிச | வெகுதானிய, மார்கழி | மலர் கூ |


## "நாஞ்சில் வேள்" மறுப்பு

திரு. அ சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் M. A.,
தமிழ் விரிவுரையாளர், அண்ணமலைநகர்.

தமிழ்ப் பொழில் துணர் 14—மலர் 3-இல் "நாஞ்சில்வேள் அல்லது வள்ளுவன்" என்ற தலைப்பில் வந்த கட்டுரைச் செய்தி சிலவற்றை மறுக்க எழுவது இது

அக்கட்டுரையாளர் "நாஞ்சில்வேள்" என்பான் புறநானூற்று 137, 138, 139, 140, 380 பாடல்களிற் போற்றப் பட்டுள்ளான் என்று குறிப்பிட்டுள்ளார். அவனுக்கு "நாஞ்சில் வள்ளுவன்" என மற்றொரு பெயர் உண்டு என்றுங் கூறியுள்ளார். அவர் காட்டிய புறப்பாடல்களில் யாண்டும் "வேள்" என்ற சொல்லாவது "வள்ளுவன்" என்ற சொல்லாவது காணப்பட்டிலது. அங்ஙனம் இருப்பவும், "புறப்பாட்டில் நாஞ்சில்வேளின் பெயர் 'வள்ளுவன்' எனச் சுட்டப்படுகிறது" என்று அவர், (90-ஆம் பக்கத்தில்) கூறியிருப்பது ஒப்புக் கொள்ளத் தக்கது அன்று. அப்பாடல்களிலும் அவற்றின் உரைகளிலும் வள்ளுவன் என்ற சொல்வரக் காண்கின்றேனில்லை. மற்று 137, 380 ஆகிய பாடல்களின் கீழே கொளுச்சொல்லாக வரையப்பட்டிருப்பதில் மாத்திரம் "நாஞ்சில் வள்ளுவன்",

என்னும் தொடர் காணப்படுகிறது. 137, 139, 140, 380 ஆகிய பாடல்களில் "நாஞ்சிற் பொருநன்" என்ற தொடரே வந்துளது. அவன் நாஞ்சில் என்னும் மலையின் தலைவன் என்ப தன்றி, அவன் வேளாளன் என்றாதல் வள்ளுவன் என்றாதல் பாட்டுகளிற் கூறப்பட்டிலது. நாஞ்சில் என்னுஞ் சொல்லுக்குக் கலப்பை என்னும் உழுபடைப் பொருளைக் கொண்டாலன்றி அவன் வேளாளன் ஆதல் இல்லை. பலாமரம் உடைமையானும் (புறம். 140, 380), செவ்வரைப் படைப்பை உடைமையானும் (புறம். 137) நாஞ்சில் என்பது மலையே ஆதல் வேண்டும். ஐயத்திற்கு இடமின்றி,

"உயர்சிமைய உழாஅ நாஞ்சிற்பொருந" என்றே புறம் 139-இல் வந்திருப்பது சிந்திக்கத்தக்கது. உழுதற்கு ஆகாததும் உயர்ந்த சிகரங்களை உடையதும் ஆயதொரு நாஞ்சிலன்றே ஈண்டு உரைக்கப்பட்டுளது! அதனால், நாஞ்சில் இவ்விடங்களில் உழுபடை ஆகாமை தேறப்படும். ஒருகால் கலப்பையின் தோற்றத்தை உடைத்தாயிருந்தமை பற்றி அம்மலை அப்பெயர் பெற்றது போலும். முன்னே கட்டுரையாளர் நாஞ்சிலை மலை எனவே கொண்டும், எங்ஙனம் அத்தலைவனை வேளிர் மரபினருள் ஒருவனுக்கி உரைத்தார் என்பது விளங்கவில்லை. அவனது கொடைத்திறன் காரணமாக வேளிர்குலத் திலகன் அவன் எனின், வள்ளன்மையுடைய எவ்வரசனும் வேளிர்குலத்தானுக் கப்பட்டு வேறுபாடு இன்றி உரைக்கப்படவேண்டுமே! இது காறும் கூறியவற்றால், எடுத்துக்கொண்ட புறப்பாடல்களின் தலைவன் நாஞ்சில்வேளோ நாஞ்சில் வள்ளுவனோ அல்லன் என்பது வெளியாம்.

புறப்பாட்டின் கொளுச்சொற்கள் பாட்டெழுந்த பன்னெடுங் காலத்தின் பின்னே எவராலோ வரையப்பட்டன என்று தெரிகிறது. பாடலுள் பயின்று வரும் செய்திகள் போற்றப்படுமளவு கொளுவில் வருவன போற்றுதற்கில்லை. உதாரணமாக, புறம். 173-ஆம் பாட்டின் கொளுச்சொல் எனைத் தளவு உண்மை யுடைத்து என்று ஆராய்ச்சியாளர் கேட்கின்றனர்.* பாட்டின்கண் தலைவன் பெயரால் உரைக்கப்படுதல் புறத்திணையில் வரையப் பட்டிலதாதலின், பாட்டில் தலைவன் பெயரை எதிர்பார்த்தல் தகுதியுடைத்தே. பாட்டில் இலதாயினும், காலத்தொடும் செய்தியொடும் மாறுபடாத தொன்று

---

* திரு. P. T. சீனிவாஸ ஐயங்கார் எழுதிய "தமிழர் சரித்திரம்" 415—416 பக்கங்கள் பார்க்க.

கொளுவின்கண்ணென்றே உரைக்கப்பட்டிருத்தலால் வெறுத் தொதுக்கும் பான்மை உடைத்தன்று என்பது அறிஞர் ஒத்துக் கொள்ளக் கூடியது. இம்முறையே நோக்கினல், ஏனைய நான்கு பாடல்களில் வந்திராவிடினும் 380-இல் மாத்திரமாவது "கந்தன்" என்னும் பெயர் வந்திருப்பது, வாராத வள்ளுவச் சொல்லினும் ஏற்ற முடைத்து. அதுவே அவன் பெயரெனக் கொண்டார் மஹாமஹோபாத்தியாய Dr. சாமிநாத ஐயர் அவர்கள் * அப்பெயரையே அவனதாகக் கொள்ளவேண்டும் என்பது வலிபெறுதலில்லை என்பாராயின், பாட்டொன்றிலும் காணப்பெரு வள்ளுவன் என்பதே அவன் நாமம் என்பது வலி பெறுமாறு யாது உணர்த்துவரோ? சங்கத்தார் இயற்றிய தாகச் சொல்லப்படும் திருவள்ளுவமாலையிலன்றிச் சங்க இலக் கியம் எதனிலும் வள்ளுவன் என்ற சொல் வந்திலது ஆதலா லும், கொளுவில் காணப்பெறும் வள்ளுவன் என்ற சொல் பிற்காலத்தில் எப்பொருளில் ஆளப்பட்டதோ என்று ஐயுற வேண்டியிருக்கிறது.

திருக்குறள் இயற்றிய திருவள்ளுவர் வேளாண்மரபினர் என்றார் ஒருபால்; அதற்கு ஆதாரம் வள்ளுவன் எனும் சொல் வேளிர் குலத்தான் ஒருவனைப் புறப்பாட்டில் குறித்திருப்ப தாகச் சொல்லப்படுவது. மற்றொருபால், திருவள்ளுவரைப் போன்றே நாஞ்சில் வள்ளுவனும் வேளாளன் என்று கொள்ள வைத்தார். ஆராய்ந்து முடிவு செய்யப்பட்டிலாதது ஒன்று கொண்டு பிறிதொன்றினை நாட்டி, அப்பிறிதொன்றே துணையாக முன்னையதின் உண்மையை நிலைநிறுத்த முற்படுவது அழகா? திருவள்ளுவர் வேளாளரா என்பதும், "நாஞ்சில்வேள்" வேளா ளனா என்பதும் தனித்தனி உறுதிசெய்யப்படாதிருக்குந் தறுவாயில், இவருள் ஒருவர் வேளாளராதலின் மற்றவரும் வேளாளர் என்றல் பொருந்துமா?

அக்கட்டுரையாளர் ஓரிடத்தில் (பக்கம் 90) "வள்ளுவ ரும் வேளிர் குலத்தில் பிறந்து, சில காரணங்களால் வள்ளு வர் குலத்தில் வளர்ந்து பிறகு வேளிர் குலத்து மகளிரையே மணந்து, பாண்டியனிடத்து உள்படுகருமத் தலைவராகி 'வள்ளு வன்' என்னும் பட்டம் பெற்று, 'திருக்குறள்' என்னும் பெயரிய நூலை இயற்றினர்" என்றார். திருக்குறள் ஆசிரியர் வள்ளுவர் குலத்தில் வளர்ந்த வள்ளுவப் பெயர் பெற்றது

* புறநானூறு—மூன்றாம் பதிப்பு, பக்கம் 599.

தாலோ? உள்படு கருமத் தலைவராய் இருந்ததாலோ? இவ்விரண்டினாலோ? என்று அறிய வொண்ணுவாறு இஃது உள்ளது. ஆயினும், சேந்தனார் திவாகர ஆதரவுகொண்டு, மன்னருள்படுகருமத் தலைவராய் இருந்தமையால் அப்பெயர் பெற்றார் அவர் என்று பின்னர் அக்கட்டுரையாளரே காட்டியிருக்கின்றார். எனின், வள்ளுவர் எனும் குலத்தில் வளர்ந்திருக்கவேண்டியதோர் அவசியமின்மை அறிக. வள்ளுவர் குலத்தில் திருக்குறள் ஆசிரியர் வளர்ந்தது உண்மைதானா என்றோ, எக்காரணத்தால் என்றோ, வேளிர்குலமகளை மணந்தது மெய்தானா என்றோ, வினவுவேனாயின் பல பழங்கதைகளை வீணே இழுக்கவேண்டி நேரிடும் ஆதலின், இவ்வினாக்களை எழுப்பாதுவிட்டு, அவர் வேளிர் குலத்தில் பிறந்தமைக்கு மாத்திரம் அவர் கண்ட ஆதாரம் வினவுவேன். அதுபோலவே "கருங்கை ஒள்வாட் பெரும்பெயர் வழுதி என்னும் பாண்டிய அரசனுடைய உள்படுகருமத் தலைவராயிருந்த திருக்குறள் ஆசிரியராகிய நெடுமாறருக்கு" வள்ளுவப் பட்டம் ஏற்பட்டதென அவர் சொல்லியிருப்பதற்கும் பண்டைய ஆதாரம் ஆவலோடு எதிர்பார்க்கும் கடப்பாடுடையேன்.

மேல், 'முதுக்குடிப் பிறந்தோன்' என மணிமேகலையும், 'உயர்ந்தோன்' எனப் பதிற்றுப் பத்தும் வள்ளுவனைக் கூறியிருப்பதாக அக்கட்டுரையாளர் மொழிந்துள்ளார். ஆனால், இவ்விரண்டு பனுவலுள்ளும் வள்ளுவன் என்ற சொல் வந்திலது என்பது குறிப்பிடற்பாற்று. பிற்காலத்தில் முரசு அறையும் தொழிலுடையாரது தொழிலை ஒத்ததொன்றை முன்னர் மேற்கொண்ட எவனோ ஒருவன் அச்சொற்களால் முறையே மணிமேகலையிலும் பதிற்றுப் பத்திலும் குறிக்கப்பட்டுளான் என்ற அளவே உண்மை. இதனால் வெளியாவது வள்ளுவன் முதுகுடிப் பிறந்தோனாதலாலும் உயர்ந்தோனாதலாலும் இழிகுலப் பிறப்பினனல்லன் எனக் கூறுதல் தகாதென்பதே. வள்ளுவர் உயர்குடிப் பிறந்தோன் என்பதற்குப் பண்டைய ஆதாரம் ஒன்றுவது காட்டிய பின்னன்றே, மணிமேகலை, பதிற்றுப் பத்து ஆகியவற்றுள் வரும் இச்சொற்கள் வள்ளுவனையே குறிப்பன என்பது ஒப்புக்கொள்ளற் பாற்று?

அக்கட்டுரையில் காணப்படும் மற்றொரு பகுதி பெரியதொரு வியப்பினை உண்டாக்குகின்றது. "தொல்காப்பியம், 'துடியர் பாணர் பறையர் கடம்பர்' எனப் பேசுவதல்லது வள்ளுவ சாதியைப் பற்றிப் பேசுமாறு இல்லை" என்று 90-ஆம்

பக்கத்தில் காணப்படும் பகுதியன்று நான் குறிப்பிடுவது, தொல்காப்பியம் எனும் சொல் புறநானூறு (335) என்பதன் எழுத்துப்பிழை என்றலுங் கூடுமாகலின். ஆனால், நான் குறிப்பிட விரும்புவது 91-ஆம் பக்கத்தில் பெருங்கதை—காண்டம் 2, பகுதி 2, வரி 29 முதல் 33 வரையில் 6 அடிகள் உள்ளனவாகக் காட்டப்பட்டுள மேற்கோளாம். ஆறுவரிதந்து, ஐந்து என எண்ணிட்டதையும் பொருட் படுத்த வேண்டிய அவசியம் இராது, அவ்வாறும் பெருங்கதையின் அப்பகுதியில் காணப் பட்டிருப்பின், தலையில் "அரசு கொற்றத் தருங்கடம் பூண்டவர்" என இவர் காட்டியுள்ள அடி யாண்டுளதோ? "அரசு கொற்றத்தருங் கடம்பூண்ட முரசு எறி வள்ளுவ முதியனை" எனப்பெருங்கதை காண்டம் 1, பகுதி 47, வரி 155-இல் வந்திருப்பதல்லால், இப்பகுதியில் வந்திலது. அவ்வடியோ, கொற்றத்து அருங்கடம் பூண்ட முரசினை எறியும் வள்ளுவ முதியன் என்றவாறும் பொருள் கொள்ளுமாறு கிடக்கின்றது. அரசனுள்படுகருமத்தலைவனுக்கு வள்ளுவன் எனும் பெயர் உண்மையால், "அரசு கொற்றத்து அருங்கடம் பூண்ட" என்ற தொடரையும் வள்ளுவ முதியனோடு இயைக்கவே வேண்டுமென்று கொண்டாலன்றி, முன்னைய பொருளே சிறத்தல் காண்க. தெய்வமொப்பச் சிறப்பித்துப் பழந் தமிழர் வழி பட்டதாய் உரைக்கப்படுவதாலும், போர் குறித்தமை இயம்பிப் படை திரட்ட உதவும் காரணத்தாலும், அரசனது கொற்றத்தில் அருங்கடம் பூண்டது முரசு என்று கூறுதல் பழுதாகாது. உண்மையாக வெற்றி தருவது வீரரும் வேலும் ஆயினும், முரசெறிவோன் அதற்கான அருங்கடம் பூண்டவன் என்று உபசாரமாக உரைப்பது ஏற்குமெனின், அவ்வுபசாரவழியானே முரசு அக்கடப்பாடு உடைத்து என்று கூறுதலும் பொருந்தும்.

பெருங்கதை—காண்டம் 2, பகுதி 2, வரி 29 முதல் 34 வரை கீழ்வருமாறு இருத்தல் காணத்தக்கது :—

> "கோற்றொழில் வேந்தர் கொற்ற முரசம்
> பெரும்பணைக் கொட்டிலுள் அரும்பலி யோச்சி
> முற்றவை காட்டிக் கொற்றவை பழிச்சித்
> திருநாள் படைநாள் கடிநா ளென்றிப்
> பெருநாட் கல்லது பிறநாட் கறையாச்
> செல்வச் சேனை வள்ளுவ முதுமகன்."

திருநாள் படைநாள் கடிநாள் என்று இப்பெருநாட்கு அல்லாது பிறநாட்கும் அறையும் வள்ளுவரினின்றும் வேறுபிரித்து, பிற

நாட்கு அறையாச் செல்வச்சேனை வள்ளுவ முதுமகன் என ஒருவன் பெருங்கதைப் பகுதியில் பேசப்பட்டுள்ளான் எனக் கோடலும் கூடுமே! ஆதலால், பெருங்கதையில் வள்ளுவன் முதுமகன் எனப் பேசப் படுதலைக் கொண்டு அவனை உயர்குடிப் பிறப்பினன் ஆக்கி, மணிமேகலையில் முதுக்குடிப் பிறந்தோனென்றதும் பதிற்றுப்பத்தில் உயர்ந்தோனென்றதும் வள்ளுவனையே என்றல் எத்துணை பொருத்தம் உடைத்து?

திவாகரந் தானும் கி. பி. 6-ஆம் நூற்றாண்டில் எழுந்ததொரு நூல் எனத் தெரிவதால், அதுகொண்டே திருக்குறளாசிரியர் வாழ்ந்த காலத்திலும் வள்ளுவச்சொல் மன்னருள் படுகருமத் தலைவருக்கே ஒன்றிற்றென்றல் எங்ஙனம் ஆம்?

ஐந்து புறப்பாடல்களையும் எடுத்து வரைந்த பின்னர் (96-ஆம் பக்கத்தில்) "மேற்குறித்த செய்யுட்களும் அவற்றின் பொருள்களும்..........அவன்...............சேரனால் 'வள்ளுவன்' என்னும் பட்டம் பெற்றவனாகவும்..............வேளிர் குலத்துத் தலைவனாகவும் விளங்கியிருந்த(மை) நன்கு உணர்த்துகின்றன" என்று கூறி, "இவ்வேளிர் குலத்தரசனை, தற்காலம் வள்ளுவர் என்று வழங்கும் வள்ளுவச் சாதியைச் சேர்ந்தவன் என்று கூறுவார் கருத்து வலியுடைத்தாகாது. சங்க இலக்கியங்களை ஆராய்ந்து தெளிந்தார்க்கு உண்மை புலனாம்" எனச்சொல்லி அக்கட்டுரையை முடித்துள்ளார். இம்முடிவு முடிந்த முடிபாமா எனச் சங்கவிலக்கியங்களை அறிந்தார் ஆராய்ந்து கொள்வர் என்பதில் ஐயம் இல்லை. ஆராயுங்கால், வள்ளுவன் என்ற சொல்லே அப்பாட்டொன்றிலுங் காணப்படாமையும், வேளிர் குலத்தலைமை யாண்டும் விதந்து ஓதப்படாமையும் முதற்கண் வந்துநின்று, வள்ளுவன் என்று வழங்கியிருந்தாலன்றோ அச்சொல் வள்ளுவச்சாதியைக் குறித்ததா என்ற ஆராய்ச்சியுண்டு எனும் எண்ணத்தை எழுப்பிவிடும் என்பதிலும் ஐயம் இல்லை. வள்ளுவச் சொற்பிரயோகம் ஆண்டு இல்லையாகலின் இவ்வாராய்ச்சி இன்றென எடுத்துரைக்கவேண்டா அன்றோ?

ஜைன சமயத்தவரால் செய்யப்பட்ட

# யசோதர காவியம்—புத்துரை

திரு. வே. மு. ஸ்ரீநிவாஸ முதலியார் அவர்கள்
காஞ்சீபுரம்

(முற்றொடர்ச்சி துணர் 14, மலர் 8, பக்கம் 299)

68. [1]அரைசனின் னகத்து மாட்சியசோபெரி தழகி தாயிற்
றுரை செய்தா லுறுதியாய துணர்ந்துகொண் [2]டுயர்வன் [போலும்
விரை செய்தார் வரைசெய் மார்ப வினவிய பொருளி [தெல்லாம்
நிரை செய்தே புகல்வன் யானீ நினைவொடு கேளி [தென்றான்

மூன்பாடம் :—[1]அரசநின் [2]டுயர்தி.

பொருள் :—"யான் நிரை செய்தே புகல்வன்" எனவும், "உறுதியாயது உரை செய்தால்" எனவும் மொழி மாற்றுக.

பொழிப்புரை :—அபயருசி, இவ்வரசனுடைய மனத்தின் பெருமை மிகவும் செவ்வியது ஆயிற்று. இவனுக்கு அறம் சொன்னால் அதனை உணர்ந்து கொண்டு செவ்வியன் ஆகுவன் போலும் எனத் தன் மனத்தில் நினைத்து, மணம் கமழும் பூ மாலையை அணிந்த போரில் சலியாமையால் மலைபோன்ற மார்பையுடைய அரசனே! நீ கேட்ட பொருள்கள் யாவற்றையும் யான் வரிசைப் படுத்திச் சொல்லுகின்றேன். நீ, நினைவோடு கேட்பாயாக என்று கூறினான்.

குறிப்புரை :—அகம்—மனம். மாட்சி—பெருமை. அசோ—இரங்கல் பொருட்டு இடைச்சொல். உறுதி — நல்லறம். உரை செய்தால்—சொன்னால். உயர்வன்—செவ்வியன் ஆகுவன். செய் — உவம உருபு; போன்ற — போலும் — ஒப்பில் போலி. எல்லாம்—யாவற்றையும். புகல்வன் — சொல்லுகின்றேன்.

(கூடு)

## இளைஞர் இருவர்தம் வரலாற்றின் பயன்

69. எவ்வள் விதனைக் கேட்பா ரிருவினை கழுவு நீரா
ரவ்வள வவருக் கூற்றுச் செறித்துட னுதிர்ப்பை யாக்கு
மெய்வகை தெரிந்து மற்றை வெறுவினர் வீட்டை யெய்துஞ்
செவ்விய ராகச் செய்து சிறப்பினை நிறுத்தும் வேந்தே.

பொருள்:—வேந்தே இதனை எவ்வளவு கேட்பார் அவ்வளவு அவருக்கு இருவினை கழுவும் நீரார் ஊற்றுச் செறித்து உடன் உதிர்ப்பை ஆக்கும் மெய்வகை தெரிந்து மற்றை வெறுவினர் வீட்டை எய்தும் செவ்வியராகச் செய்து சிறப்பினை நிறுத்தும்.

பொழிப்புரை:—அரசனே! என்னால் சொல்லப்படும் எங்கள் வரலாற்றினை கேட்பார் எவ்வளவு கேட்கின்றார்களோ அவ்வளவுக்கு அவர்கள் தீவினையினை நீக்கும் பண்பினர் ஆவர். அன்றி, அவ்வரலாறு, பாபத்துக்கு ஏதுவான பத்துவகை ஆஸ்ரவப் பொருள்களையும் அவர்களைச் சேராமல் தடுத்து உடனே அவைகளைக் கெடுத்தலையும் செய்யும் பொருள்களின் உண்மைத் தன்மையினை அறிந்து பிறப்பாகிய சுழலின் நீங்கினவர் சேரும் வீட்டினை அடையும்படித் தூயராகச் செய்து அவ்வீட்டினும் சேர்க்கும் என்று கூறினான் அபயருசி.

குறிப்புரை:— இதனை—எங்கள் வரலாற்றினை. இருவினை—தீவினை. கழுவும்—நீக்கும். நீரார்—பண்பினர். ஊற்று—ஆஸ்ரவம்; ஆத்துமாவைச் சேரும் பாபத்துக்கு ஏதுவான பத்துவகைப் பொருள்கள்; செறித்து—சம்வரை; தடுத்து. உதிர்ப்பு—நிர்ஜ்ஜரை; கெடுத்தல். ஆக்கும்—செய்யும். மெய்வகை—பொருள்களின் உண்மைப் பண்பு. மாற்றை—பிறப்பாகிய சுழலினை. வெருவினவர் — நீங்கினவர். சிறப்பினை—வீட்டினும்; ஐ-உருபுமயக்கம். நிறுத்தும்—சேர்க்கும்.

சிறப்புரை:—ஊற்று, செறிப்பு, உதிர்ப்பு என்ற பெயர்களின் வடமொழிப் பெயர்களையும், அவற்றின் பொருள்களையும், மேருமந்தரர் புராணம் அறுபத்தெட்டாவது பாவாலும், அதன் உரையாலும் அறிக. அன்றி, உதயண குமார காவியம் நான் காவது பாவாலும், அதன் குறிப்புரையாலும் அறிக. "ஊற்றிவைதாம் பத்தாகும்" (மேருமந் — 98.) "ஊற்றுப் பத்தையும் தடுத்த" (மேருமந்—145) "நின்ற மூன்று நினைப்பு உணர்வு உதிர்ப்பையாக்கும்" (மேருமந்—100) "உதிர்ந்தன வினைகள்" (மேருமந்—433) "வருவினை வாயில் எல்லாம் அடைக்கமுன் மிடைந்தபாவம் நிருச்சரை செல்லும்" (மேருமந்—471.) (சுமெ)

70. மலமலி குரம்பை யின்கண் மனத்தெழு விகற்பை மாற்றும்
புலமலி போகத்தின்கண் ணாசையைப் பொன்றுவிக்கும்
கொலைமலி கொடுமை தன்னைக் குறைத்திடு மனத்திற்
[கோலச்
சிலைமலி நுதலி னார்தங் காதலின் றீமை செய்யும்.

பொருள் :—"போகத்தின்கண் மலி" என மொழி மாற்றுக.

பொழிப்புரை :—அழுக்கு நிறைந்த உடலின் பொருட்டு மனத்தில் உண்டாகும் மயக்கத்தினை நீக்கும். ஐம்பொறிகளால் நுகரப்படும் செல்வப் பொருள்களை மிகுதியாக விரும்பும் ஆசையை அழிக்கும். கொலையால் உண்டாகும் மிக்க துன்பத்துக்கு ஏதுவான பாபத்தினை ஒழித்திடும். மனத்தின்கண், வில்லுபோன்ற அழகிய புருவங்கள் பொருந்திய நெற்றியினை உடைய மகளிர் மாட்டு உண்டாகும், விருப்பினைக் கெடுக்கும்.

குறிப்புரை :—மலம்—அழுக்கு. மலி—நிறைந்த. குரம்பை —உடல். கண்—உருபுமயக்கம். மாற்றும்—நீக்கும். புலம் —ஐம்பொறி. மலி—மிகுதி. போகம்—நுகர்ச்சி; பொருள்; ஆகுபெயர், கண்—உருபு மயக்கம். பொன்றுவிக்கும்—அழிக்கும். கொடுமை — பாபம். குறைத்திடும் — ஒழித்திடும். கோலம்—அழகு. சிலை—வில்; புருவம்; ஆகுபெயர்—மலி— உவம உருபு. நுதல்—நெற்றி; காதல்—விருப்பம், தீமை செய்யும்—ஒரு சொல்; கெடுக்கும்.

சிறப்புரை :—"மலமலி குரம்பை"—சீழ் இரத்தம், மச்சை, புழு முதலிய நிறைந்த உடல். "என்பினை நரம்பின் பின்னி யுதிரந்தோய்த் திறைச்சி மெத்திப், புன்புறந் தோலின்மூடி யழுக்கோடு புழுக்கள் சோரும், ஒன்பது வாயிற்றூய வூன்பயில் குரம்பைதன்மேல், அன்புறு மாந்தர் கண்டாயறிவினூற் சிறிய நீரார்" (மேருமந்—116.) "எலும்பு தோல்......குப்பைகண்டு காமுறுவ தென்னோ" (மேருமந் — 857.) "விகற்பு" — ஒரு பொருளைத் துணிந்து உண்மையிதுவென அறியாது இதுவோ அதுவோ என ஐயுறுதலும், ஒருபொருளை வேறு பொருளாக எண்ணல் முதலியவாகும் மயக்கம். "காதல்" ஆண்கள் பெண்களையும், பெண்கள் ஆண்களையும் விரும்பும் விருப்பம் "சிலைமலி நுதல்"—"வருசிலைத் திருநுதல் மாமடந்தை" (மேருமந். 594.) (சுoசு)

71. பிறந்தவர் முயற்சி யாலே பெறுபய னடைவ தல்லா
இறந்தனர் பிறந்த தில்லை யிருவினை தானு மில்லென்
[1]றறைந்தன ரறிவில் லாமை யதுவிடுத் தறநெ றிக்கட்
சிறந்தன முயலப் பண்ணுஞ் செப்புமிப் பொருண்மை
[யென்றான்.

முன்பாடம் :—[1]றறைந்தவர்.

பொருள் :—"செப்பும் இப் பொருண்மை பிறந்தவர்" எனவும், "அறிவில்லாமை அறைந்தனர்" எனவும் கொண்டு கூட்டுக.

பொழிப்புரை :—என்னால் சொல்லப்படும் என் வரலாற்றின் தன்மை பிறந்தவர்கள் தத்தம் செய்கையாலே தக்க பயனை அடைகுவர், என்றும், அது அல்லாமல் இறந்தவர் பிறந்தது இல்லை என்றும், நல்வினை தீவினைகள் ஆகிய இருவினைகளும் இல்லை என்றும், ஸ்ரீ ஜினதரும நூல்களைக் கற்று அறியாதவர்கள் சொல்லினார்கள். மக்களே, அவர்கள் சொல்லிய தீய நெறியில் சேராமல் நீக்கி ஸ்ரீ ஜின தரும நூற்களில் கூறப்பட்ட சில விரதங்களைமேற்கொண்டு மோட்சத்துக்கு ஏதுவான தவநெறியில் ஒழுகச் செய்யும் என்று கூறினான் அபயருசி.

குறிப்புரை :—இறந்தனர்—செத்தவர். முயற்சி—செய்கை. பெறுபயன்—தக்கபயன். இருவினை—நல்வினை, தீவினை ஆகிய இரண்டு வினைகள். தான்—அசை. அறைந்தனர்—சொல்லினார்கள். அது விடுத்து—அவர்கள் சொல்லிய தீ நெறியின் நீக்கி 'அறநெறிக்கண்—ஸ்ரீ ஜின தரும நூற்களில் கூறப்பட்ட சில விரதங்களில். சிறந்தன—மோட்சத்துக்கு ஏதுவான தவநெறி. முயலப்பண்ணும்—ஒழுகச் செய்யும். (சூடுள)

72. அறப் பொருள் விளக்குங் காட்சி யருந்தவ ரருளிற்
[றன்றிப்
பிறப்புணர்ந் ததனின் யாமே பெயர்த்துணர்ந் திடவும் பட்ட
திறப்பவு மதன்கட் டேற்ற மினிதுவைத் திடுமி னென்றா
னுறப் பணிந் தெவரு முள்ளத் துவந்தனர் கேட்க லுற்றார்.

பொருள் :—இப்பிறப்பு அறம் பொருள் விளக்கும் காட்சி அருந்தவர் உணர்ந்து அன்று அருளிற்று அதனின் யாம் எ பெயர்த்து உணர்ந்திடவும் பட்டது. அதன்கண் இறப்பவும் இனிது தேற்றம் வைத்திடுமின் என்றான் எவரும் உளத்து உவந்தனர் உறப்பணிந்து கேட்கலுற்றார்.

பொழிப்புரை :—எங்கள் பிறப்பு, ஸ்ரீ ஜினதருமத்தின் பயனை உண்டாக்கும் நற்காட்சியையும், செய்தற்கு அரிய தவத்தையும் உடையவர் ஆகிய ஸ்ரீ சுதத்த முனிவர்களால் முன்னாள் அறிந்து எங்கட்குச் சொல்லப்பட்டது. அதனால் அது எங்களால் பின்னே அறியப்பட்டது. யான் அதனைச் சொல்லுகின்றேன். நீங்கள் அதனிடத்தே மிகவும் நல்லதாகிய நம்பிக்கையை வையுங்கள்—என்று கூறினான் அபயருசி. அவ்விடத்து இருந்த மக்கள் யாவரும் தம் மனத்தில் மகிழ்ச்சி யுடையவராய் நிலத்தில் உடல் பொருந்த பணிந்து கேட்டனர்.

குறிப்புரை :—அறம்—ஸ்ரீ ஜினதருமம். பொருள்—பயன். விளைக்கும் — உண்டாக்கும். காட்சி — நற்காட்சி; தெளிவு. அருளிற்று — சொல்லப்பட்டது. அன்று — முன்னாள். இப் பிறப்பு—எங்கள் பிறப்பு, உணர்ந்து—அறிந்து. அதனின்— அதனால். இன் — மூன்றன் உருபுப்பொருட்டு. ஏ — அசை. பெயர்த்து—பின். உணர்ந்திடவும் பட்டது—அறியப்பட்டது. அதன் கண் — அதனிடத்தே. இறப்பவும்—மிகவும். தேற்றம் —தெளிவு; ஐயமும் திரிபும் இல்லாத நம்பிக்கை. வைத்திடுமின்—ஒரு சொல்; வையுங்கள். எவரும்—யாவரும். உறப் பணிந்து — நிலனுறப்பணிந்து; விகாரம். உவந்தனர் — முற்றெச்சம்; மகிழ்ச்சி உடையவராய்.

சிறப்புரை :—காட்சி என்பது ஸ்ரீ ஜின சமயத்தின் மோட்ச மார்க்கத்துக்குச் சாதனமாகிய "நன் ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம்" என்னும் மூன்றனுள் ஒன்று. அதன் இயல்பினை "இறைவனும் முனியும் நூலும் யாதுமோர் குற்றமில்லா நெறியினைத் தேளிதல் காட்சி" (மேருமந்—355.) "விளங்கிய பொருள்கடம்மைப் பொய்வகையின்றித் தேறல் காட்சி". (சீவகசிந்—1436.) "உள் பொருள் இதுவென உணர்தல் ஞானமாம், தெள்ளிதினப் பொருள் தேளிதல் காட்சியாம்" (சீவகசிந்— 2845.) என்பவற்றால் அறிக. இந்நூலுடையாரும், "உறுபொருள் நிலைமை தன்னை உற்றுணர்வறிவதாகும், அறிபொருள் அதனின் தூய்மை அகத்தேழு தேளிவு காட்சி" என்றார். (சரு—4—செய்—16.) "சரணம்புயம் நிலனுறப் பணிந்து எத்தி" (மேருமந்—612.) "தலைநிலனுறுத்தி யொன்னார் தாளணைந்து உழையராவார்" (மேருமந்—799.) (சூழிஅ)

(யசோதர காவியம் முதல் சருக்கத்தின் புத்துரை முற்றிற்று.)

# இலக்கணம் கண்டதற்கிலக்கியம் இயம்பல்

கோவை. வித்வான். திரு. த. நடேசகவுண்டர் அவர்கள்,

தமிழாசிரியன், முனிசிபல் உயர்தரக் கல்லூரி.

"எள்ளினின்றெண்ணெய் எடுப்பது போல
இலக்கியத்தினின் றெடுபடு மிலக்கணம்"

என்னும் சூத்திரத்தான் ஆன்றோர் அருளிய இலக்கியங்களின் அமைதியைக்கண்டு அவ்வமைதியையே இலக்கணமாகப்பின்னோர் வகுத்தனர் என்பது அனைவரும் உடன்பட்ட கொள்கையாம். அத்தகைய இலக்கண நூல்களில் திளைத்து அவற்றின் நுட்பங்களை நன்கு உணர்ந்து அவற்றின் அழகிலும் அமைதியிலும் ஈடுபட்ட புலவர் பெருமக்கள் சிலர், தம் உள்ளத்தெழுந்த உவகைப் பெருக்கால், அவ்விலக்கண அமைதிகளையே உவமை,

---

இவ்வுரை யிடையே நேரிய உண்மைப் பொருள்கள் பொலிவு வுற்றிருப்பின் அவை யாவும், மேரு மந்தரர் புராணத்தின் உரையாசிரியரது ஆம். (அவ்வுரையில்லையாயின், "ஆலோகம்," "சேதி" என்ற சொற்கட்கும் உண்மைப் பொருள் அறிதல் அரிதாகும். அச்சொற்களுக்கு அரசியலாரால், இலட்சக்கணக்கில் செலவு செய்யப்பட்டுத் தொகுக்கப்பட்ட அகராதியிலும் பொருள் விளக்கம் இல்லை.) அவ்வுரையின் துணை கொண்டே இவ்வுரையினை எழுதினேன் ஆதலால் அவ்வுரையாசிரியர் நம் பாராட்டினுக்கு உரியர் ஆவர். ஏனைய பொய்ப் பொருள் பொதிந்து கிடப்பன எல்லாம் என்னுடையதே. இந்நூலுக்கு உரை எழுத எண்ணுதற்கும் உரியன் அல்லன். ஆயினும் இதனைக் கண்ணுற்றேனும் நல்லறிஞர்கள், நல்லவுரை யொன்று எழுதி வெளியிடுவான் இப்புல்லுரையினை யான் எழுதினேன். ஆதலால், "குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள், மிகை நாடி மிக்க கொள" வேண்டுகின்றேன்.

"நல்லறம் நானிலன் முற்றும் நண்ணுக"

எடுத்துக்காட்டு முதலிய பலவேறு வகைகளாக எடுத்து ஆண்டு, தாம் இயற்றிய இலக்கியங்களை அழகுபடுத்தியுள்ளர். அத்தகைய ஆட்சிகள் சிலவற்றை எடுத்துக்கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாதலால், "இலக்கியங் கண்டதற் கிலக்கணமியம்பல்" என்னும் தொடரைமாற்றி இலக்கணங் கண்டதற் கிலக்கிய மியம்பல் என இதற்குப் பெயரிட்டேம்.

செய்யுள் இயற்றும் ஆற்றல் ஒருவருக்கு இயல்பிலேயே அமைந்திருத்தல் வேண்டும். அஃதிலாதார் புனைந்த பாட்டுக்கள் படிப்போருள்ளத்தைக் கவரும் பான்மையில. அதனாலன்றோ "காரிகை கற்றுக் கவிபாடுவதிற் பேரிகை கொட்டிப்பிழைப்பது நன்றே" என்ற பழமொழியும் எழுந்தது. இவ்வாறு கவிபாடும் ஆற்றல் கருவிலே யமைந்திருந்த திருவுடையோரும், அவ்வாற்றலை அழகு படுத்தத்தக்க இலக்கணநூலறிவும் வாய்த்திருந்தால்தான் அறிவுடையோரால் அவர்தம் கவிகள் மதிக்கப்பெறும். இன்றேல் அவை வால் நீண்டகவி, வாலற்ற கவிகளாகவே கருதப்பெறும். அதனைக் கருதித் தான் போலும் படிக்காசுப்புலவர் மேற்காட்டிய பழமொழியை மாற்றிக் "காரிகையேனும் கற்றுக் கவிபாடார் பேரிகொட்டக் கூடக் கடவர்தாமே" எனப்பாடினர். காரிகையேனும் என்னும் இழிவு சிறப்பு உம்மையால், செய்யுளிலக்கணம் ஒன்றையே கூறும் காரிகையோடு, எழுத்துச் சொற்பொருள் அணி இலக்கணங்களையுட் நன்கு பயின்றோரே சிறந்த கவிகளியற்றவல்லார் என்பது போதரும்.

மேலே கூறிய, கவிஞருக்குவேண்டிய இருவகைத்தகுதிகளையும் ஒருங்கே வாய்ந்த புலவர் பெருமக்களிற் சிலர் தாம் பயின்ற இலக்கணநூல்களின் நுணுக்கங்கள் பலவற்றையும், தாம்பாடும் இலக்கியங்களில் கூறும் பொருளை விளக்கத்தக்க, உவமை, எடுத்துக்காட்டு முதலிய பல்வேறு வழிகளில் ஆண்டிருக்கின்றனர். அத்தகையரில், கச்சியப்பமுனிவர், சிவப்பிரகாசர், குமரகுருபரர் முதலியோர் சிறந்தவராவர். அவர்கள் அவ்வாறு அமைத்த சில பாக்களை ஈண்டு எடுத்துக்காட்டுதும்.

### கச்சியப்பர் பாக்களிற் சில

நெட்டெழுத்தின்பின்னும் தொடர்மொழிகளின் இறுதியிலும், வல்லெழுத்தின்மேல் ஏறிவரும் உகரம் ஓசைகுறுகிய இயல்புடையது என்றும், அவ்வாறு குறுகியவற்றுள் வன்றொடர்க் குற்றியலுகரம், புணர்மொழியிடைப்படின், பின்னும்

ஓசைகுறையும் என்றும், அது அங்ஙனம் குறுகுவது வல்லெழுத்து முதன்மொழி வருவழி என்றும் ஆசிரியர் தொல்காப்பியர்,

"நெட்டெழுத்திம் பரும் தொடர் மொழியீற்றும்
குற்றியலுகரம் வல்லாறூர்ந்தே"

"இடைப்படிற் குறுகும் இடனுமாருண்டே"

"வல்லொற்றுத் தொடர் மொழி வல்லெழுத்து வருவழித்
தொல்லை இயற்கை நிலையலு முரித்தே"

என்ற சூத்திரங்களான் மொழிந்தார். அதற்குக் "கொக்குக் கடிது" "கொக்குக் கடுமை" என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் உதாரணம் காட்டினர். இவ்விலக்கண முடிபை,

"குன்றியலுத்தொடர் வல்லின முன்பின் குறுகநிற்பிற்
குன்றுவதுள்ள அளவையின்; நின்னொடு கோற்றொடியைக்
குன்றிற கீர்த்தவனுதியர் நன்கு குறிக்கினும் எம்
குன்றவர் வண்குலம் குன்றுவ புன்சொற் கொழூர்தெழுமே"

(தணிகைப் புராணம், களவுப் படலம், 227-ஆம் செ.)

என்னும் செய்யுளில் எடுத்துக்காட்டி, உவமையாக்கித் தாம் கூறவந்த அகப்பொருட் கருத்தை அழகுபடுத்தியிருப்பது பெரிதும் பாராட்டற்பாலது:—இச்செய்யுளின் கருத்தாவது: வள்ளி நாச்சியாரைக் களவில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு என்ற வகையிற் புணர்ந்த வேட்டுவக்குமரன், பின் அவளது தோழியிடம் சென்று, தோழியிற் கூட்டம் பெறுதற்குக் குறையிரந்தான். தோழி தலைமகனை நோக்கி "எம் குலம் தாழ்ந்தது; நும் குலம் உயர்ந்தது. உயர்குலத்தாரொடு இழிகுலத்தார் சேரின் தமக்குள்ள சிறிது பெருமையும் குன்றும். ஆதலால் உம்மொடு எம்தலைவி கூடின் எம்குலம் சிறுமையுறும்; எவ்வாறெனில் இயல்பாகவே அரை மாத்திரை அளவுள்ள வன்றொடர்க் குற்றியலுகரம் வல்லின முதன் மொழியொடு புணரின், அரை மாத்திரையினும் குறுகிக் கான் மாத்திரை பெறுவதுபோலாம்" என்றாள், என்பது. இதனுள் வன்றொடர்க்குற்றியலுகரம் தலைவியின் குலத்துக்கும் வல்லின முதன்மொழி தலைவன் குலத்துக்கும், அக்குற்றியலுகரமும் வன்முதன் மொழியும் கூடும் கூட்டம் தலைவி தலைவன் என்னும் இரு கூட்டத்துக்கும் குற்றியலுகரத்தின் அளவு குன்றுதல் தலைவியின் குலப்பெருமை குன்றுதற்கும் உவமையாதல் காண்க.

இவ்வாறு தோழி தன் கருத்தை வற்புறுத்த இலக்கணத்தினின்று உதாரணம் கூறியதைக் கேட்ட தலைமகன், தானும் இலக்கணத்தினின்றே உதாரணம் காட்டி அவள் கூறியதை மறுக்கின்றான் :—

"ஆரணங்கே, தனித்து நின்று பொருளுணர்த்தும் ஆற்றலில்லாத இடைச்சொற்களும் உரிச்சொற்களும் பெயர்வினைச் சொற்களைச் சேர்ந்து அவ்வாற்றலைப் பெறுதல் கண்டிலையோ. அதுபோலப் பெருமை குறைந்ததென நீ கூறும் நும் குலமும் எம் குலத்தொடு கூடின் பெருமை மிக்குவிளங்கும்" என

"பெயர்வினைசேரின் இடையுரியாங்கும் பிறங்கெழில்வாய்த்
தயர்வினை யெய்தாதினிதியலா மிற்கும் ; ஆரணங்கே
மயர்வினை தீர்த்தருள் வீராட் டகாசத் தெம்மான் அருளால்
உயர்வினையே நுங்குலம் என்றும் எம்மாலுறுவதுவே"

என்ற கவியாற் கூறினான்.

தன் குறையைத் தலைவியிடம் கூறும்படி தலைவன் தோழிபால் வேண்டினன். தன் தலைவிக்கும் அவனுக்கும் முன்பே கூட்ட முண்மையை அறிந்ததோழி அவன் குறையை அவனையே சென்று தலைவியிடம் கூறும்படி கூறுகின்றாள் :—

"அண்ணலே, மெய்யின்மேல் ஏறிநின்ற (உயிர்மெய்யின் கூற்றிலுள்ள) உயிரும் உயிரும் புணர்தற்கு அன்றே அவற்றினிடையே உடம்படு மெய்யொன்று வேண்டுவது. மெய்யோடு உயிர் கூடுதற்கு இடையே வேறொன்றும் வேண்டுவதில்லையே? அதுபோல் எம்தலைவி முன்பே தான் என்பதோர் தன்மையிழந்து, வெற்றுடலினளாயிருத்தலன்றி நின்னையே தன்னுயிராக உடையாள். ஆதலால் அத்தகையாளோடு நீ கூடுதற்கு யான் இடையில் வேண்டுவது எற்றுக்கு? நீயே நின்குறையை அவளிடம் சொல்லிக்கொள்க" என்று கூறியதாக,

"சடம்படுமாவியும் ஆவியுமாயிற் சந்திக்க இடை
உடம்படு மெய்யொன்றுற வேண்டுவது; உடலோடுயிர்வக்
கிடம் படு மாயின் இடையொன்று வேண்டுவது எற்றுக்கண்ணால்
மடம்படு கண்ணிக்கு நீயே மொழிய வலித்தியின்றே"

என்ற திருப்பாட்டால் ஆசிரியர் கூறிய அழகு வியக்கத்தக்கதாம்.

(தொடரும்)

# பணையரும் இந்திரனும்

வித்துவான், திரு. S. தருஸ் அந்தோணி அவர்கள்,
St. Joseph's, Trichinopoly.

திராவிட நாகரீகத்தை வெளியுலகத்திற்கு அறிவிக்கும் சின்னங்கள் வட இந்தியாவிலுள்ள மோகஞ்சுதாரிலும் ஆரப்பாவிலும் 1923-ஆம் ஆண்டில், ஆர்க்கியாலஜீ சூப்பரின்டேண்டேன்ட், ஆர். டி. பெனார்ஜி என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மோகஞ்சுதாரு, வடசிந்துவிலுள்ள இலர்க்கனா ஜில்லாவிலுள்ள ஒரு சரித்திர சம்பந்தமான விடமாகும். இவ்விடத்தில் கண்ட சின்னங்களைப்போல் சுமேரியாவிலுள்ள ஊர் என்னும் இடத்திலும் கிடைத்துள்ளன. ஆனால் சிந்துப் பள்ளத்தாக்கில் கிடைத்துள்ள இலச்சினைகளுக்கும், சுமேரியாவில் கண்ட இலச்சினைகளுக்கும் உள்ள வேற்றுமை யாதோவெனில், மோகஞ்சுதாரில்கண்ட 558 இலச்சினைகளில் மூன்று உருண்டை வடிவமாயுள்ளன. ஏனையவைகள் சதுர அமைப்புள்ளன. இவ்வாறு இற்றை நாள் வரையிலும் வெளியிடப்படாத 926 இலச்சினைகளில் ஆறு இலச்சினைகள் உருண்டை வடிவமாயுள்ளன. இவைகளுக்கு மாறாக சுமேரியாவில் கண்ட 19 சிந்து நாகரீகச்சின்னங்களில் மூன்றைத்தவிற ஏனையவையெல்லாம் உருண்டையானவையே; அவற்றுள் ஒன்று வட்டமான மூலைகளைக்கொண்டுள்ள சதுர இலச்சினையே யாகும். இவைகளைக் கொண்டு, உருண்டை இலச்சினைகள் சிந்துயாற்றின் பாகங்களுக்கு அந்நியமே எனத் தெற்றெனத் தெரிந்துகொள்ளலாம். எனினும் இவைகள் இந்தியாவின் ஏனைய பாகங்களிலிருந்தே சுமேரியாவுக்கு வந்தனவேயொழிய வாணிபத்தின் பொருட்டு மோசப்பத்தாமியாவுக்குச் சென்ற இந்தியவணிகர்களால் சிந்துப் பள்ளத்தாக்கிலிருந்து கொண்டுபோகப்படவில்லை. சிந்துநதிப் பள்ளத்தாக்கிலிருந்தும் ஒரு சில வணிகர் மொசப்பத்தாமியாவுக்குச் சென்றதாகத் தெரிகின்றது.

இந்திய வணிகர் மொசப்பத்தாமியாவுக்குச் சென்றதாக "பேபரு ஜாதகம்" (Baberu Jataka) என்னும் நூல் தெளிவாய்க் கூறுகிறது. இந்த நூலிலுள்ள பௌத்தக் கதையில், பழங் காலத்தில் இந்தியவணிகர், தங்கள் நாவாய்களில், காகத்தையும்

கொண்டு பேபருவுக்கு (பாபிலோன்)ச் சென்றதாகக் கூறப்பட்டுள்ளது. காகம் அந்நாட்டுக்கு நவமான பொருளாதலால் அதனுடைய பளபளப்பான கரிய நிறத்தையுடைய சிறகுகளையும், நீண்ட அலகையும் உருண்டை வடிவமான கண்களையும் கண்டு அந்நாட்டுமக்கள் அதிசயித்தனர். இறுதியில் அவர்கள் அந்த வணிகரைப் பார்த்து, "ஐய! இப்பறவை எங்களுக்கு விருப்பமாயிருக்கிறது. எங்கள் விருப்பத்தை நிறைவேற்ற இதை எங்களுக்குக் கொடுத்துவிடுங்கள். உங்கள் நாட்டில் நீங்கள் வேறு ஒன்றைப் பிடித்துக்கொள்ளுங்கள்" என்று கேட்டனர். அவர்கள் சிறந்த செட்டிகளாதலால் விலைப்பொருட்டன்றிக் கொடுக்க மறுத்தனர். உடனே, அவ்வன்னியர் அப்பறவைக்கு ஒரு காசு கொடுக்க, அக்காசை வாங்கமறுத்து, படிப்படியாக நூறு காசு வரையிலும் விலை கூறினார்கள். இறுதியில் அதைக் கொடுக்க மனம் இல்லாதது போல் நடித்து "இப்பறவை எங்களுக்கு மிகவும் பயனுள்ளது. ஆனால் நமக்கும் இருநாட்டினருக்கும் நட்பு உண்டாதல்வேண்டும்" என்று அதை நூறுகாசுக்கு விற்று விட்டனர்.

தம் நாட்டுக்குச் சென்ற வணிகர் மீண்டும் பாபிலோனியாவுக்குச் சென்றனர். இச்சமயம் சிறந்த மயில் ஒன்றைக்கொண்டு சென்றிருந்தனர். அந்நியர் கை நீட்டினவுடன் கத்தவும், கை தட்டினவுடன் நடனம் செய்யவும், அவர்கள் அதைப் பழக்கி இருந்தனர். பின்னர், பாபிலோனிய மக்கள் கரையிலிருந்து கொண்டு அந்த அதிசயப் பறவையைக் கண்டு மூக்கில் விரல் வைத்து வியந்தனர். மயிலும் நாவாயின் முனையிலிருந்துகொண்டு இனிய குரல் எழுப்பிச் சிறகை விரித்து ஆடிற்று. இதைக் கண்ணுற்ற, அம்மக்கள் வணிகரைப் பார்த்து "இந்தப் பறவை பார்ப்பதற்கு அழகாயிருக்கிறது. நன்கு பயிற்றப்பட்டிருக்கிறது. இதை எங்களுக்குக் கொடுங்கள்" என்று ஆயிரம் காசுகள் கொடுத்து அதைப் பெற்றனர். (Cowell. The Jataka Or Stories of the Buddha's Former Births. Book IV. No. 339.)

இக்கதை மிகப் பழங்கதையே; ஆனால் புத்தர் நிருவாணத்திற்கு வெகு காலத்திற்குப் பின் எழுதப்பட்டது. ஒரு சிலர் ஜாதகாக்கதைகள் மகாபாரதத்திலுள்ளனவையே என்று கூறினர். ஆனால் பிராங்கி (Franke) என்பார் ஜாதகாக் கதைகளுக்கு மகாபாரதம் முதல் அல்ல என்றும், பாரதக் கதைகளுக்கு ஜாதகா முதல்நூல் அல்லவென்றும் தக்க தடை விடைகளால் மறுத்துவிட்டார். (Franke. Jataka Mahabarada Parallelen W. Z. K. M. XX P. 317 ff.) ஆதலால் இக்கதை, ஆரியர்

இந்நாட்டில் நுழைவதற்கு முன்தோன்றியது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இஃது கதையாயினும், பண்டைக்கால இந்தியர், மேல் நாட்டோடு வியாபாரத் தொடர்பு வைத்திருந்தனர் என்ற உண்மை இக்கதையிலிருந்து விளங்குகின்றது. நமது முன்னோர், மயிலும் காகமும் மாத்திரம் கொண்டு வாணிபம் செய்தனர் என்று கொள்வது தவறாகும்; நம் நாட்டு ஏனைய பொருள்களையும் கொண்டு சென்றனர். இக்கதையை ஆதாரமாகக் கொண்டு காலத்தைக் கணிக்க முடியாவிட்டாலும், ஜாதகா நூலாசிரியர் காலத்தில் பாபிலோனியா சிறந்த வணிகப் போக்குள்ள விடமாயிருந்திருத்தல் வேண்டும் என்பது நன்கு விளங்குகிறது.

இவ்வணிகர் யாவர் என்ற வினா நிகழுமன்றோ? இருக்கு வேதத்தில் பனியரைப் பற்றிப் பலவிடங்களில் கூறப்பட்டுள்ளன. "பனியர் எவருக்கும் ஈயார்" (இருக்கு. vi. 53-3.) "பனையர் (பனியர்) பலியிடுவதற்குக்கூடக் குருக்களுக்குக் கொடார்" (இரு. v. 34, 5, 7) வாணிபத்தின் பொருட்டு பாபிலோனியாவுக்குச் சென்ற மக்கள் இந்தப் பனையர்களாகவே இருந்திருத்தல் வேண்டும். இருக்கு வேதத்தில் கூறப்பட்டுள்ள பனையருடைய குணமும், ஜாதகாவில் கூறப்பட்டுள்ள வணிகருடைய குணமும் ஒன்றுபோல் தோன்றுகின்றது; காகம், மயில் முதலியன விற்ற நிகழ்ச்சி தெற்றெனக் குணத்தை வெளிப்படுத்துகிறது. ஆயுங்கால், பனியாக்கள் மிகுந்த செல்வம் படைத்தவராகவே விளங்குகிறது. (இரு. v. 34-5.) அவர்கள் குவித்த செல்வத்திற்கு அளவில்லை; (இரு. 1. 83. 4.) ஆதலால் பணத்தை வட்டிக்குக் கொடுக்கும் செட்டிகளாகவும் விளங்கினர். (இரு. vii 66. 10.) மேற்கூறிய காரணங்களால், லட்விக் (Ludwig) என்பவர், பனியாக்கள் வணிகரே என்று அறுதியிட்டுக் கூறுகின்றார். (Translation of the Rigveda iii. pp. 213, 215.) ஆகையால் பேபரு ஜாதகத்தில் கூறப்படுகின்ற வணிகர் பனியாக்கள் என்று நாம் துணிந்து கூறலாம். ஆனால், இப்பனியாக்கள் திராவிடர்களா? ஆரியர்களா? என்ற ஐயந் தோன்றும் அல்லவா? சொல்லுவன்:

வடநாட்டிலுள்ள எல்லாவகை மக்களும் ஆரியரைச் சார்ந்தவர்களே என்று நீண்டகாலம் கருதப்பட்டும் எழுதப்பட்டும் வந்தது. ஆனால் பார்கையிற்றர் (Pargiter) என்னும் பெரியார் தனது ஆராய்ச்சியால், வடநாட்டிலுள்ள ஒரு சில மக்களுள் ஆரியரல்லாதார் இரத்தம் ஓடுகிறது எனக் காண்பித்தார். (Pargiter. Ancient Indian Historical Tradition pp. 303.

310.) பின்னர், ஆர். டி. பெனூர்ஜி என்னும் ஆராய்ச்சியாளர் அவரைத் தொடர்ந்து, அவ்வுண்மையை ஆய்ந்து வந்தார். Benarji. Prehistoric, Ancient and Hindu India pp. 20, 26 etc.) வெல்லர் (Weller) என்னும் பெரும்புலவர் பிருகுயர்களும் கூடத் திராவிடரே என்று கூறுகின்றூர். (Weller. Who were Bhriguids A. B. O. R. I. XVIII. pp. 296 — 302.) லட்விக் என்பவர் பனியாக்கள், ஆரியர்களுக்கு முற்பட்ட இந் நாட்டுக் குடிகளே என்று கூறுகின்றூர். (Loc. Cit. Cf. Cambridge History of India 1, p. 82.). கூர்ந்து ஆய்வோமாயின், ஆரியர் தாஸ்யுக்களை எவ்வளவு இழிவாகவும் வெறுப்பாகவும் கருதினூர்களோ அவ்வளவு இழிவாகவும் வெறுப்பாகவும் பனியாக்களைக் கருதினூர்கள். (இரு. 1-124, 10; 180, 7; IV 51, 3; VI. 51, 14.) இருக்கு வேதத்தில், பனியாக்களை வெறுத்ததாகவும் இழிவாகவும்கண்ட சொற்றொடர்கள். "கடவுளர் அவர்களுக்குத் துணைபுரியார்." (இரு. 1. 151, 9.) ஏனெனில் தங்களுக்குத் துணைபுரிய ஆரியர் தேவர்களை அழைத்தனர். (இரு. 1. 183, 4; 184, 2; III 58, 2; V 34, 7; 61, 8; VI, 13, 3; 20, 4; 32, 2; VIII. 64, 11.) "அக்கினி, பனியாக்களுடைய கொள்ளையடித்த செல்வத்தை எடுத்துக் கொள்ளுகிறுன்" (இரு. VI. 13, 3.) "இந்திரன், அவர்களுடைய பாசறையைக் கொள்ளை யடிக்கிறுன்" (இரு. V. 34, 7.) திவுதாசன் என்ற பெரிய ஆரியத்தலைவன், அவர்களோடு போர்செய்து, அநேகரைக் கொன்று வெற்றிபெற்றுன். (இரு. VI. 61, 1 ff.) இக்காலத்தில்தான் பனியாக்கள் தங்கள் பொதுப் பகைவரை எதிர்க்கப் பறவதர்களோடு சேர்ந்துகொண் டனர். இந்தப் பறவதர் திராவிடர்கள் என்று கூறப்படவில்லை. ஆனால் சிந்துப் பள்ளத்தாக்கின் நாகரீகச் சின்னங்களின் எழுத் துக்களை வாசித்துக் கண்டறிந்தபின், பறவதர் திராவிடர்களே என்று ஐயுறவின்றி விளங்குகின்றது என்று ஹேராஸ் அடிகள் கூறுகின்றூர்கள். 'பறவதம்' என்பது ஆரியம். இதன்பொருள் பறவையைத் தங்கள் கொடிகளில் பொறித்துள்ளவர் என்பதாகும். தற்காலத்தில் 'பரவர்' என்று இடையினம்பெய்து கூறுகிறேமே யன்றி, வல்லினம் பெய்கிறதில்லையே, இஃது எவ்வாறு பொருந் தும் என்று வினவின், ஆரியத்திற்கு வல்லின றகரம் இன்மையின், ஆரியர் இடையினமான பொது ரகரத்தையே வழங்கினர். ஆத லால், இடையினம் வழக்கில் வந்ததென்று கொள்க. சின்னங் களில் பறவர்கள் அடிக்கடிக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (Heras. Mahenjo Daro. People and the Land etc.) மேலும் இழி வாகக் கருதப்பட்ட தாஸ்யுக்களும் பனியாக்களைச் சேர்ந்தவர்

களே. (Ath. V. 22, 6; XII. 3, 13, 4, 9; Chandogya Upanishad VI. 1, 10.) ஏனைய விடங்களில் அவர்கள், **தாசர்** என்றும், **தாஸ்யுக்கள்** என்றும் வெளிப்படையாக அழைக்கப்படுகின்றனர். (இரு. VII. 6, 3; V. 34, 3, 7; Ath. V. 11. 6.) இன்னுந்தெளிவுற உரைப்பின், அவர்கள் '**பகைமொழி பேசுபவர்**', என்று பொருள் உள்ள "மிருத்ரவாசகர்" என்றே அழைக்கப்பட்டனர். இப்பெயர், ஆரியர்களால், தங்களை எதிர்த்த திராவிடர்களுக்கு அளிக்கப்பட்டது. 'பனி' என்னும் சொல், தற்காலத்தில், தமிழில் 'பனை' என்றும் கன்னடத்தில் 'பனே' என்றும் சொல்லப்படுகின்றது. திராவிடர்கள் எத்தகைய குலக்குறிகளைக் கொண்டிருந்தனர் என்று எல்லோருக்கும் தெரியும்; அந்தந்த அடையாளங்களாலே, அவர்கள் தங்கள் குலங்களை அழைத்துக் கொண்டனர். மீன் குறியுடையோர் **மீனவர்** என்றும், பறவைக் குறியுடையோர் **பறவர்** என்றும், எறும்புக் குறியுடையோர் **எறும்பர்** என்றும், குரங்குக் குறியுடையோர் **குரங்கர்** (குடகர்) என்றும், அணில்குறியுடையோர் **அணிலர்** என்றும் இரண்டு இலைக்குறியுடையோர் **கலக்கிலர்** என்றும் அழைத்துக்கொண்டனர். பனியாக்களும் பனைக்குறியுடையோர் என்று தெரிகின்றது. **சானுதாரம்** என்றவிடத்தில் கிடைத்த இலச்சினையில் ஒரு பனைமரக்குறி காணப்படுகிறது; ஆனால் அவ்விலச்சினையில் எழுத்துக்கள் இல்லை. (Majumdar, Explorations in Sind, Memoirs of the Archaelogical Survey of India No. 48 Pl. XVII No. 34.) ஒருவேளை இச்சின்னத்தில் காணப்படுகின்ற பனைமரக்குறி, பனியாக்களுடைய குறியாகவிருக்கலாம். ஆதலால் நாம் அவர்களை இனிமேல் பனையர் என்றே அழைப்போம்.

பேபரு ஜாதகத்தில் கூறியபடி, திராவிடர்கள், நாவாய் ஏறிக் கடல் கடந்து உலகத்தின் பலவிடங்களிலும் வாணிபம் செய்து தங்கள் நாகரிகத்தைக் கிழக்கிலுள்ள **ஜாவா**, **பலி**, முதலிய தீவுகளிலிருந்து மத்தியதரைக் கடலைச் சுற்றியுள்ள பலநாடுகளிலும், **நார்மண்டி**, **இங்கிலாந்து**, **அயர்லாந்து** முதலிய மேற்கு நாடுகளிலும் பரப்பினர்கள். (Benarji of Cit. pp. 30-31; Heras, Mohienjo Daro and Sumer; The origin of the Round Proto-Indian Seals Discovered in Sumer, Reprint pp. 1, 2, Monumenta Nipponica. Child New Light on the Most Ancient East p. 204-227; Rapson. Ancient India in The Cambridge History of India p. 42. Rys Davids Buddhist India pp. 94, 115, 116.

(தொடரும்)

# அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை.

பண்டிதர். திரு. மு. அருணாசலம் பிள்ளை அவர்கள்,

இத்தமிழ்ப்பேரவையின் சிறப்புக்கூட்டம் 18—7—38-ஆம் நாள் பிற்பகல் 5 மணிக்குக் **கோகலே ஹாலில்** தமிழ்ப் பேராசிரியர், பண்டிதமணி, மு. கதிரேசச்செட்டியார் அவர்கள் தலைமையில் மிக்க சிறப்பாக நடைபெற்றது. அதுகாலை, உயர் திரு. **விபுலாநந்தசுவாமியவர்கள் (B. Sc. லண்டன்)** ''**எனது கயிலாய யாத்திரை**'' என்னும் பொருள்பற்றி, சுமார் ஒருமணி நேரம் அரியதோர் சொற்பொழிவியற்றினார்கள். ஆசிரியர், மாணவமாணவிகள் பெருந்திரளாகக் குழுமியிருந்தனர். முதலில் கடவுள்வாழ்த்துப் பாடப்பெற்றபின், தலைவரவர்கள், உபந்நியாசகருடைய உயரிய கல்வி அரியகுணஞ்செயல்கள் ஆகியவற்றைப் பாராட்டி அறிமுகப்படுத்தினர். அப்பால் சொற்பொழிவு தொடங்கப்பெற்றது. அதன் சுருக்கம் வருமாறு:—

''முன்னாளில், அப்பமூர்த்திகள் தக்கிண கயிலாயமென்னும் திருக்காளத்திமலையில் திருப்பதிகம்பாடிச் சிவவழிபாடு செய்து முடித்த பின்னர், வடகயிலைசென்று ஆங்கு எழுந்தருளியிருக்கும் அம்மையப்பருடைய திருவுருவத்தைக் கண்ணாரக் கண்டு வழிபாடு செய்ய வேண்டுமெனப் பேரவாக்கொண்டு வடக்குநோக்கிப் புறப்பட்டனர். அந்நிலையில், ''உள்ளங்கால் வெள்ளெலும்பு'' தோன்றக் காலாலே நடந்தும் நெஞ்சால் தவழ்ந்தும் உடம்பிற் றசைமுழுதுந் தேயும்படி புரண்டும் பல காடு மலை சுரங்களைக் கடந்து அப்பாற்செல்ல வியலாது இடைவழியில் உணர்ச்சியற்றுக் கிடந்தபோது, அன்பர்க்கெளிய ஆண்டவன் அந்தணவுருவில் வெளிப்பட்டு அப்பர் செலவைத் தடுக்கவும்,

'' ஆளு நாயகன் கயிலையின் அழகுகண் டல்லால்
மாளு மிவ்வுடல் கொண்டுமீ ளேனென வலித்''திருந்த

அவரது உள்ள நிலையை உணர்ந்தும், தென்றமிழ் நாட்டில் மீட்டுஞ் சிலகாலமிருந்து பதிகம் பாடுதலாகிய திருத்தொண்டு செய்

விக்கக் கருதியும் திருவையாற்றில் கயிலைக் காட்சியைக் கொடுத்தருளினர் என்னும் வரலாற்றைப் பெரிய புராணத்திற் படிக்கின்றோம். தவயோகங்களால் தட்பவெப்பங்களைத் தாங்கும் உடலுரமும் மனவுறுதியும் உடைய பெரியோர்களே ஆங்கு வசித்தற்கு உரியராவர். அத்தகைய கயிலைக் காட்சியை இந்நாளில் வேறுபல சாதனங்களால் அடையமுடிகின்றது. இமையமலை கடல் நீரில் மூழ்கிக்கிடந்த பண்டைக்காலத்தும் கயிலைமலை வெளிப்பட்டு நின்றது. இமையத்தைக் கடந்து திபேத்து நாட்டின் வழியாகச் சிலவாரங்கள் காலால் நடந்தும் குதிரையிலேறிக்கொண்டும் செல்லவேண்டும். வெள்ளிய மணற்குன்றுகள் போன்று பனித்திரள்கள் எங்கும் நிறைந்துள்ளன. நம் நாட்டுத் திருக்கோயில்களின் அமைப்புப்போலவே மூன்று பிராகாரங்களையுடையதாய் விளங்குகிறது. திருமலையை அடுத்துள்ள முதல் வீதியிலும் மூன்றும் வீதியிலும் நாம் செல்லவியலாது. நடுவீதி முப்பதுமைல் சுற்றளவுள்ளது. மூன்று நாட்களில் அவ்வீதிவழியே திருமலையை வலம் வரலாம். அந்நாட்டுப் பெரியோர்கள் தலையால் வலம்வரும் காட்சி கன்னெஞ்சையுங் கனிவிக்கும். ஆங்கு முற்றத்துறந்த முனிவர்களின் மடாலயங்கள் பலவுள்ளன. இறைவன் சந்நிதிவாயில் தெற்கு முகமாக அமைந்துள்ளது. "ஊழிதோறூங்கும் அவ்வோங்கல்" எனச்சிறப்பிக்கப்பெற்ற அத்திருமலையின் சிகரமானது ஒள்ளிய வெண்பொன்னை உருக்கி வார்த்தாற்போன்று மாசற்ற நீல ஆகாயத்தில் சிவலிங்க வடிவமாக ஒளிவீசா நிற்கின்றது. ஆங்குப் புறவிருள் இரவிலும் புலப்படாததுபோலவே, அணுகிய அன்பர்கள் அகவிருள் நீங்கப்பெற்று அறிவொளி விளக்கம் எய்துவர் என்பதற்கு ஐயமேயில்லை. இத்திருமலையின் இடப்பால் கௌரிசங்கர் என்னும் சிகரம் ஒன்றுளது. அதனையடுத்து, "மானசவாவி" என்னும் நீலப்பைஞ்சுனை படிகம்போல் தெளிந்த நீர் நிறைந்து நீராடுதற்கேற்ற வெந்நீர் ஊற்றுடையதாய்த் திகழ்கின்றது. அதனிடத்தே அன்னங்கள் வாழ்கின்றன. அதன் வடபால் இராட்சசவாவி என ஒரு பொய்கை காணப்படும். அதுவேசூரபத்மன், இராவணன் முதலியோர் தவஞ்செய்த இடமென நம்பப்படுகிறது. அன்றியும் நாற்புறத்தும் பரிவார

தெய்வங்களின் ஆலயங்கள்போன்று சிறுகுன்றுகள் பல காணப் படுகின்றன. கங்கை, சிந்து முதலிய நான்கு நதிகள் அங்கு உற்பத்தியாகிக் கிழக்கு, மேற்குத் திசைகளை நோக்கிச் செல்கின்றன. மைசூர் மன்னர்பெருமான் தாம் கயிலாய யாத்திரை செய்து வந்த பின் வெளியிட்ட புகைப்படம் அத்திருமலையின் ஒரு பகுதியேயாகும். முற்றும் படம் பிடித்தற்கியலாது. நிற்க.

திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழார்பெருமான் தம் அகக்காட்சியாற் கண்டு கயிலையென்னுந் திருமலையைச் சிறப்பித்துப்பாடிய பாடற் பகுதிகளிற்கண்ட வருணனைகள் உற்றுநோக்குவார்க்கு உண்மையாகவே புலப்படும். அவை வருமாறு :—

"பொன்னின் வெண்டிரு நீறு புனைந்தெனப்
பன்னு நீள்பனி மால்வரைப் பாலது
தன்னை யார்க்கும் அறிவரி யானென்றும்
மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை"

"அண்ணல் வீற்றிருக் கப்பெற்ற தாதலின்
நண்ணு மூன்றுல குந்நான் மறைகளும்
எண்ணில் மாதவஞ் செய்யவந் தெய்திய
புண்ணி யந்திரண் டுள்ளது போல்வது"

"நிலவும் எண்ணில் தலங்களும் நீடொளி
இலகு தண்டளி ராக எழுந்ததோர்
உலக மென்னும் ஒளிமணி வல்லிமேல்
மலரும் வெண்மலர் போல்வதம் மால்வரை"

என்பவற்றால், பொன்னிறமேனியில் வெண்ணீறு பூசியது போன்று பொற்கோட்டு இமையத்தையடுத்து வெள்ளிய கயிலையுள்ளதென்றும், மூன்றுலகத்தவரும் நான்மறைகளுஞ் செய்த தவத்தின் பயனாய புண்ணியம் (வெண்ணிறமாகக் கூறுதல் கவிமரபு) திரண்டாற் போல்வதென்றும், அளவிறந்த பல தலங்களையும் தளிராகக் கொண்டெழுந்த உலகமென்னும் ஒளிமணிக் கொடியின் உச்சியிற்பூத்த வெண்ணிறப் பூப்போல்வதென்றும் சேக்கிழார்பெருமான் கூறிய வருணனைகள் வெறும் புனைந்துரையாகமாட்டா. உண்மையேயாகும். அக்கயிலைத் திருமலையின் சிகரப் பொலிவும் மானசவாவியின் மாண்பும் தலையால் நடந்து

வலம்வரும் அன்பர்களின் பத்திப் பெருக்கும் ஆகிய மூன்றும் உள்ளுந்தோறும் உள்ளங்குளிர்விக்கும் ஒப்புயர்வற்ற அரிய காட்சிகளாகும். ஒருமுறை அவ்யாத்திரை செய்துவந்தபின் என் உடலில் நாற்பது 'பவுண்டு' எடை குறைந்திருந்தது. காஞ்சிப்பதியிலுள்ள கயிலாயநாதர் கோயிலின் உயரம் அகல நீள முதலிய அமைப்புக்கள் அத்திருமலையின் நானூற்றில் ஒரு பங்காகும்'' என்று சுருக்கமாகத் தம் யாத்திரையிற்கண்ட உண்மை யநுபவங்களைக்கூறி எல்லோருள்ளத்தும் உவப்பும் வியப்பும் ஒருங்கெய்தும் வண்ணம் கயிலைக் காட்சியைக் காட்டி அன்பர்கள்கேட்ட பல ஐய வினாக்களுக்கும் தக்க விடைகூறித் தம் சொற்பொழிவை முடித்தார்கள்.

அப்பால், தலைவரவர்கள் முடிவுரை கூறுங்கால், அடிகள் கயிலாய யாத்திரையில் குதிரையேறிச் சென்றதாகக் கூறியது, சுந்தரமூர்த்திகள் வெள்ளை யானையிலும், சேரமான்பெருமாள் குதிரையிலும் ஏறிக் கயிலை சென்ற வரலாற்றை நினைவூட்டுகிற தென்றும் அரியவாகக் குறிப்பிட்ட மூன்றனுள் இயற்கையாய் அமைந்த சிகரப்பொலிவு, மானசவாவி என்னும் இரண்டினும் அன்பர்கள் தலையால் வலம்வரும் பத்திப்பெருக்கே பாராட்டற் குரியதென்றும், ஒருமுறை வலம்வந்த அளவில் அடிகள் பருவுடலின் நான்கில் ஒருகூறு தேய்ந்து அத்துணை உள்ளொளி பெருகுமாயின், இன்னும் மூன்றுமுறை வலம்வரப் பெற்றால் பருவுடல் முற்றும் ஒழிந்து ஒளியுடலாகிய தேசோமயமான சரீரம் பெறுதல் ஒருதலை என்பது புலனாகுமென்றும் கூறிமுடித்தார்கள். பின் காரியதரிசியால் வந்தனங் கூறப்பெற்று அக் கூட்டம் இனிது நிறைவேறியது.

உ

# வள்ளல் மலையமான் திருமுடிக் காரி

(ஒரு சிறு நாடகம்.)

திரு. சிவ. குப்புசாமிப் பிள்ளையவர்கள்
தலைமையாசிரியர், கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி, தஞ்சை

(முற்றொடர்ச்சி துணர் 14, மலர் 8, பக்கம் 316)

## இயல்-உ காட்சி-உ.

**உறுப்பினர் :—** மலையமான் ; கபிலர் ; மாறோக்கத்து நப்பசலையார் ; காவலன்.

**இடம் :—** முள்ளூர் மலைக்கோயில்.

**பொழுது :—** மாலைப்போது.

[மலையமான், கபிலருடன் மலைவளங்கண்டு மகிழும் போது மாறோக்கத்து நப்பசலையார் பரிசில் நாடி அவனைக் காணல்]

**மலையமான் :—** புலனழுக்கற்ற அந்தணாள ! இயற்கையோ டியைந்த வின்பத்தினுமிக்க மற்றொன்று இவ்வுலகினிலுண்டோ? ஆண்டுக்காண்மின் ! 'எம்மினுஞ் சிறந்தாரிவணிலர்' என இறுமாந்து மொழிவன போல, தம் அழகிய தோகைகளை விரித்து, களிப்புடன் அம்மயில்கள் ஆடுகின்றன. அவற்றின் ஆடற்கேற்பச் செவ்வழிப்பண்ணைச் சீர்பெற எடுத்து மொய் வரி வண்டுகள் முரல்வன கேண்மின்! கிள்ளையுங் குயிலும் செம்போத்தும் நாகணமும் செவிக்கினிதாமாறு எழுப்பு மிவ்வொலித்திரள் அவ் ஆடுமயில்கள்பால் அகக்களிப்புறுவன போலன்றோவுளது.

பெரும ! ஒருவன் எத்தகைச் செயற்கை யின்பநுகரினும் இறையொளிவீசும் இவ்வியற்கையின் ஓரணுவிற்கு அவை ஈடாகா. இவ்வேனிற் கொடுமையைத் தணிப்ப யாம் எத் துணைச் சார்புகளமைத்தும் அவை யாவும் ஈண்டு மென்மெல வசைந்து நறுமணம் விரவ இயலொலி செய்து வருகின்ற இம்

மெல்லிய பூங்காற்றுக்கு நேராகா; மற்றும், சிலுசிலுத்தோடும் அருவியின் காட்சியும்-சினையிடை மறைந்து மகிழ்வுறக்கத்துச் சிறுகுருகுகளின் ஆர்ப்பும்-வான்பரப்பு சுருங்க நாண்மலர் விரித்த நன்மணமும்-ஒரிடைத்திகழ்தலால், உள்ளமும் உணர்வும் ஒன்றுபட்டு, ஒரு தனிப்பொருளின் அருணலம் பெறுதற்கு ஏற்றவாறு என்பால் தோன்றுமோர் இன்னிலைப்பேற்றினை, என்னென்பேன்! பெரும, யாவும் தங்களது வருகையாலன்றோ இன்று எற்குக்கிட்டின.

**கபிலர்** :—உயிர்க் குறுதியின்றெனினும் உண்மை நெறி வழுவாத உரவோய்! வளர்க நின் கொற்றம்! எனது வருகை ஒருவாறு நின்பால் இன்பம் விளைக்கலாம்; எனினும், நின் போன்றவரது கூட்டுறவின்றி இவ்வுலகவாழ்வினை எம்மனோர் என்றும் பெறார். மற்றும், எம்போன்றார்க்கு நின்னையன்றி வேறு துணையேது? வள்ளால்! ஈண்டு அணிசெய்து விளங்கும் இவ்வியற்கைத் தோற்றத்தை நோக்குதி; யாவும் இறைவனின் இன்செயல்; அற்றன்று, அவனது திருவடிவம். இவ்வடிவினை உளம்பற்றி நின்று களிப்பதே அவற்குரிய வழிபாடு. எவ்வகைச் செயற்கை யழகும் இவ்வியற்கையின் அடித்தூசுக்கு இணையுடைத்தன்று. மேலும், நிமிர்ந்தும் வளைந்தும், சரிந்துங் குவிந்தும், தனித்துந் தொகுத்தும் நமக்குக் காட்சி தரூஉம் இவ் வரைகளினிடத்து, எம்மருங்குங் காணுதற்குற்ற பச்சைக் கலிங்கமிட்டாற்போலப் பசுந்தழை மலியப் பரவிச் செழித்த செடிகளும், நெருங்கப்பிணைந்து வளனுறப் படர்ந்து மணமலர் பொருந்தித் தென்றலால் துவளும் கொழுவிய பூங்கொடிகளும், வானகடு பிளக்க வளம்பட வோங்கித்தேனடை செறியத் திகழு நெடுமரங்களும், பழுத்த பலாவின் பருத்த சுளைகளை வாய் மடுத்து அதன் கொட்டைகளை வீசியெறிந்து மரக்கொம்புகளில் தாவியோடி விளையாட்டயரும் மந்தியுங் கடுவனும் தந்துள இவ்வின்பவுணர்ச்சியும், நாம் பெரிதும் முயன்று அமைக்கும் செயற்கைத் தோற்றத்தில் காணலாகுமோ? ஆகவின், மலைய! இயற்கை யோடியைந்த இன்பமே இறையின்ப மாவதறிக.

**மலையமான்** :—பொய்யா நாவிற் புலவ! தங்களது பொருளுரைக்கேற்ப எனது வாழ்க்கை யமைய இறையருள் புரிக. எனினும் அஃது என்பால் முயற்கோடாகுமோவென ஐயுறுகின்றேன்; ஏனெனில் இயற்கை நங்கை தன் எழினடங்கண்டு தெவிட்டா வின்பத்துள் திளைத்தற்குற்ற பேறு, யான் இப்பிறப்பிற் பெறேனெனுந் துணிபுடையேன். இறைமையிலீடுபட்ட

நாள் முதலாக இத்தமிழகத்தில் போரும்பூசலுந் தலையெடுத்து நின்று, எம்மனோர் நினைவை என்றுந் தம்பாலீர்த்துள்ளமையான், என்போன்றோர் ஓரிடையிருந்து இன்பந்துய்த்தல் எவ்வாறு இயலும்? இருப்பினும், இனி யான், போர் நினைவைச்சுருக்கி, மன்பதைக்குற்ற நலன்களை மிகுக்கு மனமுடையனாவேன். தங்களை ஒத்த சான்றோர்கள் என்பாலிரக்கங்காட்டி உடன்வாழ உளங்கொண்டால் எதனையும் யான் எளிதினிற் பெறுவேன் என்பது திண்ணம்.

**கபிலர்** :—நன்று பொருந! குடிநலன் காக்குநின் கொற்றமோங்குக! மலைய, யான் ஓர் அந்தணன்; மற்றும் புலவன். என் அனையர் பலநாடுகள் சென்று செங்கோலோச்சும் நின் போன்றாரது பெறுதற்கரிய மாண்புகள் யாவும் ஞாலமுணர நல்லிசைப் பாக்களா னவின்றும் ஊழ்வலியுடைமையா லுற்றதம் ஆட்சி ஆழ்துயர் மூழ்க அறவினை தவிர்ந்து தன்னலம்பேணும் தசைபொதி சுமந்த கோனிலையறியாக் கொடுங்கோலவர்க்கு இனிய நன்மொழிகளை இடித்துக் கூறியும் நாட்டின் தீங்கினை யோட்டியும் பலபடப்பணிகள் புரிபவராதலால், நிலையாக ஓரிடத்திருக்க எவ்வாறாகுமெனக் கவல்கின்றேன்.

**மலையமான்** :—நல்லிசைக் கலைஞ! பொறுத்தருள்க. இத்தமிழக மாகு முடலினது இனிய வுயிர்போன்ற தாங்கள் இந்நாட்டின்பாற் கொண்டுள்ள பொறுப்பினை யுணர்ந்தும் தன்னல மீக்கூர, இவை மொழிந்தேன். தங்கள் திருவுளப்படியே யாண்டுஞ் சென்று வருக. எனினும், இந்நாட்டின்மீது மிகுந்த பற்றுக்கொண்டு, பலகால் இவண் போந்து, இனிதிருக்க வேண்டும் என்ற எண்ணம் என்பாற் றோன்றுகின்றது. தங்கள் கருத்து யாதோ அறிகிலேன்.

**கபிலர்** :—கலைஞருளக் கோயிலமர் காரி! நின் கருத்துப்படியே ஆகுக. மற்றும் இதுபோது, யான் மொழிவன செவிமடுக்க. நின் நிகர்ப் பெருந்தகையோர் பல்லாண்டுகட்கொரு முறையே இந்நிலமீது வருகின்றனர்; இஃதுண்மை, வெறும் புகழ்ச்சியன்று. மற்றும், குறுநிலக்காவலர்கள் பலரும் இத்தமிழகத்தே நிரம்பிக்கிடக்க, அவர் எவரானுங் கருதவியலா 'ஓர் உயரிய மணிமுடி' நின்னையன்றோ பரிசாகச் சார்ந்தது. நடுவூர் மரம் பழுத்தால் என்ன நீ இருத்தலால், நாளும், பாணருங் கூத்தரும் புலவரும் இரவலரும் நின்னைப் புகழ்ந்து நாடி வருவதை யுணராதவர் யாவர்? ஆதலால் மலைய, நின்பாற் கூறுவ

தோன்றுண்டு. அஃதாவது, "ஒரு திசையினிலுள்ள கொடை வள்ளலாகும் ஒருவனையெண்ணி, நான்கு திசைகளினுமுள்ள பல வேறு வகையினராய இரவலர்கள் நாளும் வருவர். அவ்வாறு வருபவர்களது திறனறிந்து வரிசைப்படுத்துவதென்றால் அது மிகவும் அரிதாகும். எனினும், அவர்கட்குத் தருதல் மிக எளிது. ஆதலால், நீ இதனை நன்குணர்ந்தாயாயின், நின்னைப் புகழ்ந்து வரும் புலவர்கள் யாவரிடத்தும், ஒரே மனப்பாங்கு கொள்ளாது அவரவர் தகுதிக்கேற்ப நின்கொடையமையுமாக" என்பதேயாம்.

**மலையமான் :—** வெறுத்த கேள்வி விளங்கு புகழ்ப் பெரும! எமக்குற்ற துணையாகும் தங்களது உளத்துற்ற செம்மொழிக்கு மாறாக, புதுவதாக இன்று சில புகலத் துணிந்தமைக்குப் பொறுத்தருள்க. பெரும! தங்களுயிர்த் தோழன் மாரிவண் பாரி, சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கியதும் முடமோசியார் பாடிய ஆய்அண்டிரன், நாகம் நல்கிய நீலக்கலிங்கம் ஆலமர் செல்வற்களித்ததும் மாரிநாள் நடுங்குமென மயிற் பறவைக்கு, பரணர் புகழ்ந்த பேகன் பட்டாடை தந்ததும் மற்றுமிவையன்ன பெருஞ்செயல்களும் தகுதி ஆய்ந்து கொடுத்தனவையோ? இன்றுளார் நாளைக்கிலர் எனும் பீடுபெற்ற இம்மாநிலத்தே, ஈகையுளங்கொண்டபோது பெரியவர், சிறியவர்: தக்கார், தகாதார்: மேலோர், கீழோர்: எனும் பாகுபாடின்றிக் கொடுத்தலேசாலும் எனுங் கொள்கையினன் யான் ஆதலின், எனது கொடை எவர்க்கும் ஒரே படித்தாயுளது. எனவே, கலைஞ, எனது கருத்துணர்ந்த தாங்கள் என்பாற் குறைதவிர்ந்து அருளுவீராக.

**கபிலர் :—** மாவண் தோன்றால்! மல்குக நின் கொடைவளம். நின் நினைவுப்படியே யாவும் நிகழ்வனவாக. "நினது நாடு, மலைநிலங்கொண்டமையான் கடலாற் கொள்ளவும் பகைஞராற் கருதவும் படாதது. எனினும், அழலோம்பும் அந்தணர்க்கு உரியது. குறையாத செல்வமும் வென்றிமிக்க போர்ப்படையுங்கொண்ட மூவேந்தருள் ஒருவன், நீ அவனுக்கே படைத்துணையாக வேண்டுமென அவனது ஆள்வழியே நின்னைப்புகழ்ந்து பெரும் பொருள் தருகின்றான். அவனையொப்ப மற்ற இருவரும் தங்கட்கே துணையாமாறு தனித்தனி புகழ்ந்து நீ மகிழ்வாயென பெரும்பொருள் தருகின்றனர். இம்மூவர் தரும்பொருளும் நின்குடியை வாழ்த்திவரும் பரிசிலர்க்கே உரியது. ஆதலால் அருந்ததியொத்த கற்பும் மென்மை நன்மொழியும் பெற்ற அரிவைத் தன்மை பூண்ட நின் மனைவியின் அழகிய தோள்களன்றி

நினக்குரியதென்று ஒன்றும் இன்று. எனினும் மிக்க பெரு மிதத்தோடு நீ வாழ்கின்றாய்; வீரக் கழல்புனைந்த அழகிய செம்மையான அடிகள்பெற்ற காரி! இதன் காரணம் எவரானும் காணலாகுமோ?'' வள்ளால், நின்கொடைச் சிறப்பால் அறக் கடவுளும் தன் அகந்தை கெடுவன் என்பது திண்ணம்.

**மலையமான் :**—மறைமொழிப் பெரும! என்பாற்கொண்ட தங்களது பேரன்பே இவை மொழிந்தது. அவ்வாறே யான் வாழ்தற்கு ஐயன் அருளுக. யாம் இனி இருக்கை செல்வோம் **(திரும்புதல்- நோக்குதல்)** அருட்பெரும! ஆண்டுக் காண்க! ஒரு நங்கை; நம்மையன்றோ நாடிவருகின்றனர்....ஓ! மாறோக்கத்து நப்பசலைப் பெருமாட்டியார்.......(புலவர் பெருமாட்டி, **கூட்பிய கையினராய் அணுகுதல்)** வருக அன்னையே! வந்தருள்க!!

**மாறோக்கத்து நப்பசலையார் :**—'பகைவர் யானையின் நெற்றிப் பட்டத்துப் பொன்னால் வாடாத தாமரை செய்து பாணர் முடிமீது அழகுறச் சூட்டிய உயர்சிறப்பும் நீங்காவலிமையும் பெற்ற விறலோன் மருக! இராப்பொழுது, தான் ஓரிடத்தே உறங்கிக் கிடத்தல் போன்ற இருள் நிறைந்த சிறுகாடும், பறை யோசை செய்யும் அருவியும் பெற்ற முள்ளூர்மன்ன!! பூட்பல் பெற்ற பாம்பை வீசியெறியும் இடிபோல முரசு அதிர்ந்து முழங்க, நல்லிணக்கமில்லாப் பகைஞரை அவர்தம் முதன்மை யானையொடு முடியரசுங் கவிழ அருஞ்சமரில் தாக்கித் தடுக்கும் பெண்ணையாற்றுப் பக்கமுள்ள வளநாட்டுத் தலைவ!!!' வணக்கம். **(கை கூப்புதல்)**.

**மலையமான் :**—(தொழுங்கையுடன்) அன்னையே! இவண் தாங்கள் கருதினமையை நன்குணரேன். எனினும், தங்கள் போன்றாரது நலமேம்பாட்டிற்கே எனது செல்வம் உரித்து, என்பதனை மறவேன்.

**மாறோ-பசலையார் :**—வாழிய பெரும! 'ஒருபொருளைக் கற்று வல்லவராயினும் அல்லாதவராயினும் விரைவில் நின் பாலணுகி புகழ்ப் பேசுவோம் என்றால், அழிக்கலாகா இயல் புள்ள நின் சுற்றத்தோடு விளங்க, ஞாலத்து மிகுந்த மக்களனை வரினும் குற்ற நீங்கிய புலமை மிகு அந்தணன்-கபிலர் பெரு மான், பரிசில் நாடிச் செலும் பாவலர்க்கு, இனிப்புகழ இட மின்றி, நின் இசை யாண்டும் பரவி நிற்கப் பாடினன். ஆதலால், சினமிகுபடை பெற்ற சேரன், மேற்கடற்கண் பொன்தரூஉம்

கப்பல் ஓட்டிய அவ்வழியே பிறகலங்கள் செல்கலாதனபோல யாமும் உள்ளேம். எனினும் வறுமை நோய் எம்மைத் துரத்தவே, நின்பால் புகழ்பாட வந்து நின் கொடைச் சிறப்புள் ஒருசில யாங்கள் புனைந்தோம்' வல்லாள! எளியேமை யேற்றருள்க.

மலையமான் :—இயன்மொழி நவிலும் என் அன்னாய்! இனி நல்குரவு தங்களை நாடாதொழிக. நெடிது நடந்தமையால் தங்கள் மேனி பொலிவிழந்து சோர்வுற்றுளது. இத்தேர்மீது முன்னதாகச்சென்று களைப்பினைப் போக்குக; யாமும் விரைவில் வருகின்றேம். [காவலனை நோக்கி] ஏடா! காவல, இப்பெரு மாட்டியை நம் தேவியர்முன் அழைத்தேகுக. பிராட்டி, நீராடி நல்லுடையணிந்து, உணவு கொண்டதும் நம் மன்னவைக்குக் கொணர்க. மற்றும், நம் அமைச்சரிடம் 'பொன் நெடுந்துகிலும், புகர் முகக்களிறும், அணிகிளர்தேரும் ஆடகப்பசும்பொன்னும் நப்பசலையார் பரிசுக்காக இன்னே அமைக்க' எனும் எம் திரு வாய்மொழியினை இயம்புக.

காவலன் :—(வணங்கி-ஒடுங்கி) தங்களாணைப்படியே, பெரும! (செல்லுதல்.)

நப்பசலையார் வணங்கிச்செல்ல, மலையனும் கபிலனும் மகிழ்வுற நோக்குதல்.

காட்சி முடிவு.

# வடமொழியும் ஆசிய-ஆஸ்ட்ரேலிய மொழிகளும்

வித்வான். திரு. மா. இராசமாணிக்கம் அவர்கள் P. O. L.

ஆரியர் இந்தியாவிற் புகுமுன் இந்தியாவில் இருந்த மொழிகள் மூன்று:—(i) ஹிமாலய மொழிகள் (மலை அடிவாரப் பிரதேசங்களில் பேசப்படுபவை). (ii) திராவிடமொழிகள் (iii) முண்டாமொழிகள். பின்னவை இரண்டும் வட இந்தியாவில் இருந்தபோது ஆரியம் (சமஸ்கிருதம்) இந்தியாவினுள் நுழைந்தமையால், ஆரியர் தாம் முன்னர் அறிந்திராத பலவகை மரங்கள், செடி கொடிகள், பழவகைகள், விலங்குகள், விளைபொருள்கள் முதலியவற்றின் பெயர்களைத் திராவிடரிடமிருந்தும் முண்டரிடமிருந்தும் கடன் பெற்றனர்.[1] இஃது எந்நாட்டிலும் நடைபெறும் இயல்பே அன்றோ? இவ்வுண்மை உணராமல் வடமொழிப் புலவர் பலரும், வடமொழியை உயர்த்திப் பேசலே பிறவிப்பயன் என்று எண்ணியிருப்பவர் சிலரும் எச்சொல்லை எடுத்தாலும் 'அது வடமொழியிலிருந்து வந்தது; வடமொழிச் சிதைவு' என ஆராய்ச்சி அறிவு இன்றிக் கதறுகின்றனர். அப்பெரியார்கள் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள ஆராய்ச்சி நூல்கள் பலவற்றையும் படித்து அறிவைப் பெறல் நலமாகும். எல்லாம் வல்ல இறைவன் அப்பெரியார்கட்குப் பகுத்தறிவையும் நடுநிலைமையையும் நல்குமாறு நாம் வேண்டுவோமாக!

"பேராசிரியர் 'ஸ்டேன் கோனோ' என்பார் ஆரிய இலக்கணத்தைத் திராவிடமொழி மாற்றியிருத்தல் கூடுமென்பதைக் கண்டறிந்தார்; அங்ஙனமே, முண்டர்மொழியும் செய்திருக்கக் கூடும் என்பதை மெய்ப்பிக்கலாம் என்பர்"[2] எனவரும் தொடர்களைக் காண்க. "பேராசிரியர் 'ப்ரீஸ்லஸ்கி' என்பார், "இந்தியக் கதைகள் (இந்துமதக் கதைகள்) பலவற்றையும் 'மத்ஸகந்தி கதை' போன்ற மாபாரதக் கதைகளையும் ஆஸ்ட்ரிய-ஆசிய மொழிகள் பேசும் மக்களிடைக் கேட்கலாம். இவை இம்மக்கள் கதைகளெனக் கூற இடமுண்டு[3]" எனக் கூறுதல் உணர்தற்பாலது. 'ப்ரில்லட்ஸ்கி' என்பாரே, "மதம் சம்பந்தமாக

---

1 Vide 'Pre-Aryan and Pre-Dravidian in India' p. 4.

2 Ibid. Int. p. xi. 3 Ibid. Int. p. xiii.

'லிங்கம்' என்னும் சொல் ஆராய்தற்கு உரியது. இது ஆசிய-ஆஸ்ட்ரியச் சொல்லாகும். 1923-ல்நான் சிலவகை ஆராய்ச்சிகள் செய்யலானேன்; ஆரிய இந்தியக் கதைகள், கர்ண பரம்பரைச் செய்திகள், கட்டுக் கதைகள் முதலியன ஆஸ்ட்ரோ-ஆசிய மக்களிடமிருந்து ஆரியர் கடன் வாங்கியவை என்பதைக் கண்டறிந்தேன்,"[1] எனக் கூறுதலும் நோக்கற்பாலது. "பண்டை இந்திய சமூக-மத விஷயங்களில் ஆசிய-ஆஸ்ட்ரிய நாகரிகம் எவ்வளவு குடிகொண்டுள்ளது என்பதை யான் இரு கட்டுரைகள்மூலம் விளக்கி உள்ளேன்" என 'ஜீன் பிரிஸ்லஸ்கி' கூறியிருத்தலும் உன்னற்பாலது.[2] இனி, எவ்வெவ்வாரியமொழி ஆசிய-ஆஸ்ட்ரேலிய மொழிகளிலிருந்து கொள்ளப்பட்டது என்பதைக் கீழே காண்க. அங்ஙனம் கொள்ளப்பட்ட பலவற்றுள் சில கீழே தரப்படுகின்றன:

| | வடமொழி | ஆசிய-ஆஸ்ட்ரிய சொற்கள் |
|---|---|---|
| 1. | பாண—அம்பு | பன—அம்பு |
| | பிநாக—வில் (பின்+ஆக) | ஆக், அநக்—வில் |
| 2. | மார்பு (பெண்)—சுசுக | சுசு—மார்பு (பெண்) |
| 3. | அங்கார்—அடுப்புக்கரி | அங்கு—அடுப்புக்கரி |
| 4. | கபோல—கன்னம் | கப—கன்னம்<br>கபோ—முகம்<br>தபோ—முகம் |
| 5. | நாரிகெலா—தேங்காய் | நியர்—தேங்காய்<br>கொலே—பழம்<br>நியர் கொலே—தேங்காய்ப்பழம் |
| 6. | கமதா, கர்கட—நண்டு | காதா, கடம், கதாம்—நண்டு |
| 7. | பெகா—தவளை | புஆக், தபெக், தபெங்—தவளை |
| 8. | ஜங்கா—பாதம் | சாங், ஜொங், ஜங், ஜங்கா—பாதம் |
| 9. | கொடாலி—குதிக்கால் | காடெளல், டொவ்ல்—குதிக்கால் |
| 10. | துண்ட—உதடு | டெனட், ட்னட், த்மொ—உதடு |
| 11. | மசக—கொசுகு | மஸ்—கொசுகு |
| 12. | இந்துர, உந்துர—எலி | கான்டொர், கொன்—எலி |
| 13. | லதா—பிரம்பு | லதெய்க்—பிரம்பு |
| 14. | தண்டுல—அரிசி | சென்ட்ரோய்—அரிசி |
| 15. | ப்லீஹா—மண்ணீரல் | கெம்—பீல், கெம்—பல்—மண்ணீரல் |

1 Ibid. p. 15. 2 Ibid p. 135.

| | வடமொழி | ஆசிய-ஆஸ்ட்ரிய சொற்கள் |
|---|---|---|
| 16. | பகா—வெண்பறவை | பக், போக்—வெண்மை |
| 17. | கன்டா—மணி | கெண்டாங்—மணி |
| 18. | கஜா—யானை | கஜா, கஜாஹ், கசாஹ்—யானை |
| 19. | காக—காகம் | காங்—காகம் |
| 20. | ஹலாஹல—விஷம் | ஹாலெ, ஹலி—விஷம் |
| 21. | கராத்—இரம்பம் | கொராத்—இரம்பம் |
| 22. | ஙுட—சர்க்கரை | ஙுல, ஙுலா—சர்க்கரை |
| 23. | பிராகார—தடுசுவர் | பகர்—வேலி (தடை)<br>பக்ரஓ—வாய்க்கால்வெட்டு<br>பகார்—வாய்க்கால் (வங்க மொழி) |
| 24. | கதலீ—வாழை | கெலுய், தெலி, தெலெய்.<br>கதலி—தமிழ்ச்சொல் |
| 25. | பால—மயிர்<br>கம்பல—மயிர் | பல—மயிர்<br>க(ம்)பல—மயிர் |
| 26. | லாங்கல<br>லாங்குல<br>லிங்க } —கலப்பை, உழுகருவி | க—லிங்கர்<br>தெங்கால, எதங்கல்<br>தங்கால, தங்கல்<br>கல்—உழு, கலப்பை } கலப்பை, உழுகருவி, |
| 27. | லகுடா<br>லஙுடா } —குச்சி | லாங்குலா—உழுகருவி,<br>குச்சி |
| 28. | பல—பழம் | ப்லெ, ப்லெய், பண், பஞ்சா—பழம்<br>பண்டு—பழம் (தெலுங்கு)<br>பிர்ஸ்—பழம் (ப்ராஹி) |
| 29. | மாதங்க—யானை | ம, மஹ்—பெரிய; தங்—கை.<br>மதங்—பெரியகை (யானை)<br>மெய்ந்தங்—யானை |
| 30. | மயூர<br>மயூக<br>மருக } —மயில் | மரக்<br>மயக் } —மயில் |
| 31. | ருத்ரா—ஓசையிடுபவன்<br>ருத்—ஓசையிடு | பரு—ஓசையிடு, ஓசை<br>ரு—(புலிபோல்) ஓசையிடு |
| 32. | குட—கோட்டை | குட்—மூடு, குட—ஊர், கிராமம் |

இதுகாறுங் கூறியவற்றால் பல வடமொழிச் சொற்கள் ஆசிய-ஆஸ்ட்ரேலியமொழிகளிலிருந்து கொண்டவை என்பதும்,

வடமொழியாளர், முண்டர் முதலிய பழைய மக்களுடன் இந்தியாவில் கலந்து பழகியிருத்தல்வேண்டும் என்பதும் அறியக்கிடக்கின்றன. 'தாலமி' எழுதியுள்ள இந்திய ஊர்களில் 'தந்தகூர' என்பது ஒன்று. 'தந்த' என்பது யானைப்பல், யானைக்கோடு; 'கூர' என்பது நகரம்; 'கூர' என்பது ஆரியச்சொல் அன்று. 'ஊர்' என்பது தமிழ்ச்சொல்; எனவே 'கூர' என்பது ஆசிய-ஆஸ்ட்ரேலிய சொல்லாக இருக்கலாம். 'தந்த' என்னும் வடசொல்லோடு 'கூர' என்னும் ஆரியமல்லாதசொல் கலந்துவருதல், ஆரியமும் அதல்லாத பிறமொழிகளும் (திராவிடம், முண்டா மொழிகள்) ஒன்றோடு ஒன்று நெருங்கி இருந்ததை நன்கு புலனாக்குகிறது.[1]

இதுபோலவே, பல தமிழ்ச் சொற்கள் வேதகால வடமொழியிற் புகுந்து ரிக்வேதத்திலேயே இடம் பெற்றுவிட்டன. அவற்றுள், ஆணி, அரண், முத்தம் (முக்தா), பூ (புஷ்பம்) என்பன சிலவாகும். இவ்வுண்மைகளை நூலறிவும் நுண்ணறிவும் உடைய பெருமக்கள் நன்குணர்வர். இதனை அறியாப் பாமர மக்கள், 'யாவும் வடமொழியிலிருந்தே வந்த சொற்கள்' எனப் பிதற்றுவர். அறிவுடையார் நடுவுநிலை பிறழார்; நடுவு நிலை பிறழ்ந்தவர் வீணே ஒன்றை உயர்த்திப் பேசுவர். 'ஆராய்ச்சி' அறிவும் நடுவு நிலையும் இருப்பின், எவரும் தவறுகப் பேசார்.

## சுமேரிய மொழி—தமிழ் மொழி—ஆசிய-ஆஸ்ட்ரிய மொழி

'சுமேரியர்' என்பவர் அரேபியாவில் யூப்ரேடிஸ், டைக்ரிஸ் நதிகட்கு இடையே இருக்கும் பரந்த நாட்டைச் சரித்திர காலத்துக்கு முன் ஆண்டுவந்த மக்கள் ஆவர். அவர்கள் அப்பண்டைக் காலத்தில் தமிழரோடு வாணிபம் நடத்தி வந்தனர். மலையாளக் கரையிலிருந்து தேக்கமரத்துண்டுகள் அப்பழையகாலத்தில் கடல் வழியாக அனுப்பப்பட்டன என்பது தெரிகிறது.[2] அச்சுமேரியர் காலம் கி. மு. 4000-க்கு முற்பட்டது. அவர்கள் திராவிடர்களே என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.[3] அச்சு

1. Vide Pre-Aryan and Pre-Dravidian in India', pp. 140-141.
2. Vide Ragozin's Vedic India, p. 305.
3. Vide H. R. Hall's 'Ancient History of the Near East' p. 173

மேரியர் மொழிச்சொற்கட்கும் ஆசிய-ஆஸ்ட்ரிய சொற்கட்கும் ஒருமைப்பாடு சில இடங்களில் காணப்படுகின்றன; ஒரோவழித் தமிழ்ச் சொற்கள் சிலவற்றுக்கும் ஒற்றுமை காணப்படுகிறது. 'M. ரிவட்' என்னும் ஆராய்ச்சியாளர், 'சுமேரியர், ஆசிய-ஆப்பிரிக்க-ஐரோப்பியக் கலைவளர்ச்சியில் பெரும்பங்குகொண்டவர்' எனக் கூறுவர். பேராசிரியர் 'பிரிஸ்லஸ்கி' என்பார் பலசொற்களின் ஒருமைப்பாடு கண்டு வியக்கிறார்.[1]

| சுமேரிய மொழி | ஆசிய-ஆஸ்ட்ரிய மொழி | தமிழ் மொழி |
|---|---|---|
| பில் (fil) | பல் (bal') | பல் (pal) |
| ஙர் (வளை, சுற்று) | கர் | சு-வர் |
| ஙுட (ஊர், நகரம், கிராமம்) | குட | குடி |
| இங்கர் (மதில்) | | இஞ்சி |
| கர் (சுவர்) | ... | சு-வர் |
| உர், உரு (நகரம்) | ... | ஊர் |
| ஙஅ (மீன்) | க | ... |
| சிங் (மயிர், கம்பளம்) | சொங் | சிகை(குடுமி) |
| ஙலு (மனிதன்) | கொல் | ... |
| புரு | பெலெ | பழம் |
| ஙுல, ஙல் (பெரிய) | கரு | பெரு |
| மஹ் (பெரிய) | ம, மஹ் | மா |
| நே (சுட்டுச்சொல்) | நி, நே | ... |

இத்துறை ஆராய்ச்சி பல புதிய விவரங்களை விளக்கலாம்; சரித்திரத்தில் பல புதிய மாறுதல்கள் உண்டாகலாம். அறிவுடையோர் ஆராய்வாராக.

1. Vide 'Pre-Aryan and Pre-Dravidian in India', pp. 147—148

## கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு அன்பர்கள் உதவிய நன்கொடை

(வெகுதானிய, மார்கழி.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திரு. | S. சச்சிதானந்தம்பிள்ளை அவர்கள் B.A., L.T., கடலூர் | | 10 | 0 | 0 |
| ,, | சிக்கண்ணசெட்டியார் | அவர்கள் | 5 | 0 | 0 |
| ,, | A. இராமலிங்கம் செட்டியார் | ,, | 5 | 0 | 0 |
| ,, | S. சுப்பையா செட்டியார் | ,, | 5 | 0 | 0 |
| ,, | T. S. கந்தசாமி செட்டியார் | ,, | 5 | 0 | 0 |
| ,, | E. R. கந்தசாமி கவுண்டர் | ,, | 10 | 0 | 0 |
| ,, | T. S. சாமிநாத செட்டியார் | ,, | 10 | 0 | 0 |
| ,, | T. V. அப்பர்சுந்தர முதலியார் | ,, | 10 | 0 | 0 |
| ,, | C. S. குமரசாமி பிள்ளை | ,, | 10 | 0 | 0 |
| ,, | T. M. சிவசுப்பிரமணிய செட்டியார் | ,, | 3 | 0 | 0 |
| ,, | D. சதாசிவம் பிள்ளை | ,, | 50 | 0 | 0 |
| ,, | T. S. அவிநாசிலிங்கம் செட்டியார் | ,, | 25 | 0 | 0 |
| ,, | T. S. சிவசுப்பிரமணிய செட்டியார் | ,, | 15 | 0 | 0 |

கூட்டுறவுப் பதிப்பகம், தஞ்சாவூர்.